www.facebook.com / newsplustamil www.newsplus.lk twitter.com/newsplus.lk

NEWS PLUS

உன்னதமான பயணத்தின் அடையாளம்

01 APRIL 2023 - SATURDAY | Pages - 10 | E Paper - # 032 / Y 01 / 2023

Web: WWW.NEWSPLUS.LK E-mail: editor@newsplus.lk

## அரசியலமைப்பு பேரவை இன்று கூடுகிறது

அரசியலமைப்பு பேரவையின் விசேட கூட்டமொன்று இன்று (1) காலை சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் நடைபெறவுள்ளது.

சுயாதீன ஆணைக்குழுக்களை நியமித்தல் உள்ளிட்ட

02 »»

# நாடு அபிவிருத்தி அடைவதற்கு




## இனப் பிரச்சினைக்கு தீர்வு தேவை

நாடு அபிவிருத்தியடைய வேண்டுமானால் இனப்பிரச்சினைக்கு தீர்வு காணப்பட வேண்டும் என்று அதனை பிரச்சினையில் இருந்து பிரிக்க முடியாது எனவும் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தெரிவித்துள்ளார்.

இலங்கை பட்டய கணக்காளர் நிறுவகத்தினால் நடாத்தப்பட்ட "சர்வதேச நாணய நிதியம் மற்றும் அதற்கு அப்பால்" என்ற தொனிப்பொருளிலான உரையாடலில் பிரதான உரையை ஆற்றியபோதே அவர் இவ்வாறு

02 »»

## மக்களின் பேராதரவுடன் மீண்டும் ஆட்சிக்கு வருவேன்

### என்றாலும் அது மிகவும் சவால் மிக்கது

### தி–இன்டிபெட்டன்ட் பத்திரிகைக்கு இம்ரான்கான் பேட்டி



கடந்த ஆண்டு நவம்பர் மாதம் இம்ரான் கான் மீது நடத்தப்பட்ட துப்பாக்கிச் சூட்டிற்குப் பின்னர் மீண்டு வந்துள்ள இம்ரான் கான் 'தி இண்டிபெண்டன்ட்' பத்திரிகைக்கு ஒரு பேட்டியளித்துள்ளார். அதில் தன் மீது நடத்தப்பட்ட கொலைவெறித் தாக்குதல் உடலில் நீண்ட கால பாதிப்புகளை தந்துள்ளன என்று கூறியுள்ளார்.

02 »»

## எல்லை மீறும் கிழக்கு ஆளுநர்: சிங்களமயமாக்கலுக்கு முஸ்தீபு

### புன்னைக்குடா வீதிக்கும் சிங்கள பெயர்

### ஹபீஸ் நஸீர் முயற்சியில் தடுத்து நிறுத்தம்



**(ஏ.எச்.ஏ. ஹுஸைன்)**

தொன்று தொட்டு "ஏறாவூர் புன்னைக்குடா வீதி" என புழக்கத்திலிருந்து வரும் புன்னைக்குடா வீதியின் பெயரை "எல்விஸ் வல்கம" வீதி என சிங்களப் பெயராக மாற்றுவதற்கு கிழக்கு மாகாண ஆளுநர் அனுராதா யஹம்பத் உத்தரவிட்டுள்ளது பிரதேசத்தில் சர்ச்சையைக் கிளப்பியுள்ளது.

ஆளுநரின் உத்தரவு வெளியானதை அடுத்து ஏற்கெனவே ஏறாவூர் நகரை ஊடறுத்துச் செல்லும் கொழும்பு - மட்டக்களப்பு நெடுஞ்சாலையின்

05 »»

### புத்தளம் காதி நீதிபதி தாக்குதல் விவகாரம்:

## அலி சப்றி எம்.பி.யை கைது செய்ய சபாநாயகர் அனுமதி கோரும் பொலிஸார்

புத்தளம் காதி நீதிவான் கலாநிதி முஹம்மட் தாக்கியது தொடர்பாக புத்தளம் மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினரைக் கைது செய்வதற்கு சபாநாயகரின்

02 »»

## சவுதி அரேபியாவினால் உலருணவு பொதிகள்



நாட்டிலுள்ள பள்ளிவாசல்கள் மற்றும் இஸ்லாமிய அமைப்புக்களின் ஊடாக தகுதியான மக்களுக்கு உணவுப் பொதிகளை விநியோகிப்பதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு தேவையுடைய மக்களுக்கு பகிர்ந்தளிப்பதற்காக உலருணவுப் பொதிகளை சவூதி அரேபியா இலங்கைக்கு அன்பளிப்புச் செய்துள்ளது.

ஹிஜ்ரி 1444ஆம் ஆண்டு ரமழான் மாதத்தை முன்னிட்டு சவூதி அரேபியாவின் மன்னர் சல்மான் பின் அப்துல் அஸீஸினாலேயே இந்த உலர் உணவுப் பொதிகள் வழங்கப்பட்டுள்ளன.

இந்த உலருணவுப் பொதிகளை பகிர்ந்தளிக்கும் நிகழ்வானது, இலங்கைக்கான சவூதி அரேபிய தூதுவர் காலித் அல் கஹ்தானியினால் செவ்வாய்க்கிழமை (28) உத்தியோகபூர்வமாக ஆரம்பித்து வைக்கப்பட்டது.

கொழும்பிலுள்ள சவூதி அரேபிய

02 »»

## சவுதி இப்தாரில் ஈரானிய தூதுவர்



**(அஷ்ரப் ஏ சமத்)**

கொழும்பிலுள்ள சவூதி அரேபியத் தூதுவராலயம் ஏற்பாடு செய்திருந்த இப்தார் நிகழ்வு காலிமுகத்திடல் ஹோட்டலில் நடைபெற்றது.

அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள்,

02 »»

## டிஜிட்டல் கல்வி முறைக்குள் நமது நாடு பிரவேசிக்க வேண்டும்

### ஹம்பாந்தோட்டையில் சஜித்



நமது நாட்டிற்கு சரியான கோட்பாட்டு ரீதியான வேலைத் திட்டம் தேவை என்றும்,இந்த கோட்பாட்டை நாட்டுக்கு ஏற்றவாறு மாற்றியமைக்க வேண்டும்

02 »»

## ஓமான் நாட்டு ஆடை தொழிற்சாலை நிர்வாக பணிப்பாளர் மீது தாக்குதல்

### பொலிஸார் தீவிர விசாரணை

கட்டான பிரதேசத்தில் உள்ள ஓமான் நாட்டு ஆடை தொழிற்சாலையின் நிர்வாக பணிப்பாளர் கல்ஃபான் அல் ஔபைதானி என்பவர் தொழிற்சாலை வளாகத்தில் உள்ள அவரது பங்களாவில் நேற்றுமுன்தினம் (30) இரவு 10.30 மணியளவில் அடையாளம் தெரியாத கும்பலால் கடுமையாகத்

02 »»

## தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களுக்கு ஏப்ரல் மாத சம்பளம்

உள்ளூராட்சி மன்ற தேர்தலில் போட்டியிடும் அரச உத்தியோகத்தர்களுக்கு

02 »»

## அறிவித்தல்!

நியூஸ்ப்ளஸ் மின்னிதழ் முகாமைத்துவ குழுவின் தீர்மானத்தின் அடிப்படையில் எமது பத்திரகையானது இன்று முதல் "நியூஸ்ப்ளஸ்" எனும் பெயரில் வெளிவராது.

இதே நிர்வாகத்தினதும், ஆசிரியர் குழாமினதும் பொறுப்பில் **"உதயம்"** எனும் மின்னிதழ் வாரா வாரம் வெளிவரவுள்ளது.

உதயம் பத்திரிகையின் பிரதம ஆசிரியராகவும், பணிப்பாளராகவும் மூத்த ஊடகவியலாளர் என்.எம். அமீன் அவர்கள் பொறுப்புக்களை ஏற்கவுள்ளார் என்பதனையும் இத்தால் வாசகர்களுக்கு அறிவிக்கின்றோம்.

நன்றி

– முகாமைத்துவ குழுமம் –

### டிஜிட்டல்...

( முன்பக்கத் தொடர்ச்சி...)

என்றும்,இந்நாட்டில் எப்போதும் ஊசலாடியது தீவிர முதலாளித்துவம் அல்லது தீவிர சோசலிசமாகும் என்றாலும்,ஐக்கிய மக்கள் சக்தி மூன்றாவது பாதையான மனிதநேய முதலாளித்துவத்தை நம்புவதாகவும் எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

சோசலிசம்,பாட்டாளி வர்க்கம் மற்றும் தொழிலாளர் உரிமைகள் பற்றி பேசும் தரப்புகள் அதிகாரத்திற்காக தங்கள் கொள்கைகளைக் காட்டிக் கொடுத்துள்ளதாகவும்,

ஐக்கிய மக்கள் சக்தி கொள்கை ரீதியான கட்சி என்ற வகையில்,மனிதாபிமான முதலாளித்துவத்தை எப்போதும் நம்புவதாகவும் எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

அவ்வாறு உருவாகும் செல்வத்தின் பங்குதாரர்களாக நாட்டு மக்களை ஆக்குவதாகவும்,அதுவே சரியான நடுநிலையான மத்தியஸ்தமான பாதை எனவும், அதுவே நாட்டுக்கான ஒரே தீர்வும் பதிலுமாகும் என்றும் எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

ஒரு அரசாங்கத்தால் செல்வத்தை உருவாக்க முடியாது எனவும்,சமூக சந்தைப் பொருளாதாரத்தை மையமாகக் கொண்ட தேவை மற்றும் வழங்கலை அடிப்படையாகக்

கொண்ட சந்தை சக்திகளுக்கு முன்னுரிமை அளிக்கும் முயற்சியாண்மைகளுக்கு முன்னுரிமையளிப்பதே செல்வத்தை உருவாக்குவதற்கான சிறந்த வழியாகும் எனவும்,இந்த முதலாளித்துவம் ஒருசிலரை போஷிப்பதானதாகவே அல்லது நட்பு வட்டார முதலாளித்துவமாகவோ இருக்கக் கூடாது என்றும்,நாட்டிலுள்ள அனைவருக்கும் பொதுவானதாக அது அமைய வேண்டும் என்றும் எதிர்க்கட்சித் தலைவர் மேலும் சுட்டிக்காட்டினார்.

இந்நாட்டில் ஆட்சி அதிகாரத்தைப் பெறுவதற்கு திட்டங்களை வகுத்துக் கொண்டிருப்பவர்களிடம் சர்வதேச நாணய நிதியத்தைத் தவிர வேறு வழிகள் உள்ளதா என்று கேட்க வேண்டியுள்ளதாகவும்,தாம் பார்ப்பது போல்,சர்வதேச நாணய நிதியத்தை சரியாக கையாள்வதன் மூலம் நாடு முகம்கொடுக்கும் தற்போதைய சூழ்நிலையில் இருந்து மீள முடியும் என்றாலும்,சர்வதேச நாணய நிதியத்தை தமதமாக அணுகியதால் வலுவான இருதரப்பு பேச்சுவார்த்தைகளை எட்ட முடியாது போனதாக தெரிவித்த எதிர்க்கட்சித் தலைவர்,சர்வதேச நாணய நிதியத்துடன் முறையான ஒப்பந்தங்களை மேற்கொள்ளாமை குறித்து எதிர்க்கட்சியிடம் விமர்சனங்கள் உள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் "THE BLUE PRINT" பொருளாதார மாநாடு நேற்று(29) காலி மாவட்டத்தை இலக்காகக் கொண்டு இடம்பெற்றது.

நிலைபேறான அபிவிருத்தியடைந்த நாட்டைக் கட்டியெழுப்புவதற்கான ஐக்கிய மக்கள் சக்தியின் பொருளாதார நோக்கு குறித்து நீண்ட கலந்துரையாடல் இதன்போது இடம்பெற்றது.

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தலைமையில் இடம் பெற்று வரும் இம்மாநாடுகளில் கலாநிதி ஹர்ஷ டி சில்வா, எரான் விக்கிரமரத்ன,கபீர் ஹாசிம் ஆகியோரின் வளவாளர் பங்கேற்புடன் நாடளாவிய ரீதியில் மாவட்ட மட்டத்தில் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது.

ஐக்கிய மக்கள் சக்தியைப் பிரதிநிதித்துவப்படுத்தும் பெருமளவான பாராளுமன்ற உறுப்பினர்கள்,பொருளாதார நிபுணர்கள் மற்றும் இலங்கையின் பிரபல வர்த்தகர்கள் இதில் கலந்து கொண்டனர்.

இந்நிகழ்வில் உரையாற்றும் போதே எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச மேற்கண்டவாறு தெரிவித்தார்.

### அலிசப்றி...

( முன்பக்கத் தொடர்ச்சி...)

அனுமதி பெற வேண்டும் என புத்தளம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி தெரிவித்துள்ளார்.

மூன்று தினங்களுக்கு முன் காதி நீதிபதியை தனது அலுவலகத்துக்கு வருமாறு அழைப்பு விடுத்து காதி நீதவானைத் தாக்கியதாகவும் காதி நீதவான் காயத்துடன் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்தார்.

இத்தாக்குதலை அடுத்து கலாநிதி முஹம்மட் இரண்டு நாட்களாக புத்தளம் ஆதார வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று திங்களன்று வெளியேறி இருக்கிறார்.

இது தொடர்பாக மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது,

அங்கு இருவருக்கும் இடையிலே வாக்குவாதம் ஏற்பட்டதாகவும் பிறகு பாராளுமன்ற உறுப்பினர் தன்னைத் தாக்கியதாகவும் முஹம்மட் தெரிவித்தார்.

இதேநேரம் பாராளுமன்ற உறுப்பினர் அலிசப்ரி ரஹீம் தான் அவரைத் தாக்கவில்லை என்றும் தெரிவித்தார்.

பாராளுமன்ற உறுப்பினர் ஒருவரைக் கைது செய்வதற்கு சபாநாயகருடைய அனுமதி பெறப்பட வேண்டும். எனவே நாங்கள் சபாநாயகர் அனுமதியைப் பெறுவதற்கு நடவடிக்கை எடுத்துள்ளோம் என புத்தளம் பொலிஸ் மா அதிபர் தன்னிடம் தெரிவித்ததாக கலாநிதி முஹம்மத் தெரிவித்தார்.

புத்தளம் நீதிபதியாக நியமிக்கப்பட்ட கலாநிதி முஹம்மட் தன் பணிகளை ஆரம்பித்ததை அடுத்து பிரதேசத்திலே அவருக்கு நல்ல வரவேற்புக் கிடைத்துள்ளது.

பொதுவாக திருமண சர்ச்சைகளை சமரசமாகத் தீர்த்து வைப்பதற்கு அவர் நடவடிக்கை எடுத்திருப்பதனை புத்தளம் மக்கள் வரவேற்றிருக்கின்றனர்.

இந்தப் பின்னணியிலே பாராளுமன்ற உறுப்பினர் இவரை அழைத்துப் பேசியதாக கூறப்படுகிறது.

அண்மையில் நீதி அமைச்சினால் புதிதாக நியமிக்கப்பட்ட காதி நீதவான்களில் சிலாபத்தைச் சேர்ந்த கலாநிதி முஹம்மட் புத்தளம் மாவட்ட நீதிபதியாக நியமிக்கப்பட்டார். இவரது தெரிவை ஆட்சேபித்து புத்தளம் ஜம்இய்யத்துல் உலமா பாராளுமன்ற உறுப்பினரிடம் கடிதம் ஒன்றைக் கையளித்ததாகத் தெரிவிக்கப்படுகிறது. இக்கடிதம் இப்போது ஊடகங்களுக்கு வெளி வந்திருக்கிறது. இந்தப் பின்னணியிலே காதி நீதவானை தனது அலுவலகத்திற்கு அழைத்து பேசியுள்ளார்.

### ஓமான்...

( முன்பக்கத் தொடர்ச்சி...)

தாக்கப்பட்டுள்ளார்.

தாக்குதலின் போது அவர் தங்கியிருந்த பங்களாவும் கடுமையாக சேதமாக்கப்பட்டுள்ளது.

இந்த தாக்குதலின் பின்னணியில் அப்பிரதேசத்தைச் சேர்ந்த அரசியல் பிரமுகர் ஒருவர் இருப்பதாக தகவல் வெளியாகியுள்ளது.

அரசியல் உள்நோக்கம் கொண்ட இந்த கும்பல்களால் தாங்கள் தொடர்ந்து துன்புறுத்தலுக்கும் அச்சுறுத்தலுக்கும் உள்ளாகி வருவதாக ஆடைத் தொழிற்சாலை நிர்வாகம் தெரிவித்துள்ளது.

தாக்கப்பட்ட கல்பான் ஒபைதானி (55 வயது) தற்போது ஸ்ரீ ஜெயவர்தன புர மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகிறார். ஆடை தொழிற்சாலை காவலாளியும் குண்டர்களால் தாக்கப்பட்டுள்ளதோடு இந்த சம்பவம் தொடர்பில் பொலிசார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

### மக்களின்...

( முன்பக்கத் தொடர்ச்சி...)

முன்னதாக, 2022 அக்டோபர் இறுதியில் பாகிஸ்தான் நாடாளுமன்றத் தேர்தலை முன்கூட்டியே நடத்த வலியுறுத்தி அந்நாட்டின் முன்னாள் பிரதமரும் பிடிஐ கட்சியின் தலைவருமான இம்ரான் கான் பேரணியைத் தொடங்கினர். நவம்பர் 3-ஆம் தேதி அவரது பேரணி வியாழக்கிழமை பஞ்சாப் மாகாணத்தின் வஜிராபாத் வந்தது. அவரது கட்சியின் முன்னணி தலைவர்கள் உள்பட ஆயிரக்கணக்கானோர் பேரணியில் பங்கேற்றனர். இம்ரான் கான் தனது பிரச்சார வாகனத்தின் உச்சியில் இருந்தபோது, அடையாளம் தெரியாத நபர்கள் நடத்திய துப்பாக்கிச்சூட்டில், அவரது இரண்டு கால்களிலும் 3 குண்டுகள் பாய்ந்தன. இதில் படுகாயங்களுடன் இம்ரான் கான் மீட்கப்பட்டார். சிகிச்சைக்குப் பின் மீண்டு வந்துள்ள இம்ரான் கான் கடந்த சனிக்கிழமை லாகூரில் ஒரு பேரணியில் கலந்து கொண்டார். 5 மாதங்களுக்குப் பின்னர் அவர் கலந்து கொண்ட முதல் பேரணி.

இந்நிலையில், 'தி இண்டிபெண்டன்ட்' பத்திரிகைக்கு அவர் ஒரு பேட்டியளித்துள்ளார். அந்தப் பேட்டியில் அவர், "என் காலில் புல்லட் ஏற்படுத்திய காயங்கள் ஆறிவிட்டன. ஆனால் அதனால் ஏற்பட்ட நரம்பு சிதைவு நீண்ட கால பாதிப்புகளை ஏற்படுத்தியுள்ளன. என்னால் இன்னமும் நன்றாக நடக்க முடியவில்லை. எனது வலது காலில் முழுமையாக உணர்ச்சி திரும்பவில்லை. இவையெல்லாம் காலப்போக்கில் சரியாகலாம், மாறலாம் என்று மருத்துவர்கள் சொல்லியுள்ளனர். இருப்பினும் நான் இப்போதே தேர்தலுக்கு எனது கட்சியை ஆயத்தப் படுத்துகிறேன். ஏப்ரல் 30-ல் நடைபெறுவதாக இருந்த பஞ்சாப் தேர்தலை வேண்டுமென்றே அக்டோபருக்கு தள்ளிவைத்துள்ளனர். அக்டோபரில் நாடாளுமன்றத் தேர்தலும் வரும். இந்த அரசாங்கம் ஊழல் மிகுந்த அரசாங்கம். கடந்த ஆண்டு நடந்த நம்பிக்கையில்லா தீர்மானத்தின்போது மிரட்டல், சதி, ஊழல் எனப் பல மோசமான உத்திகளையும் பயன்படுத்தி ஆட்சிக்கு வந்தனர்.

லாகூரில் கடந்த சனிக்கிழமை எனது பேரணிக்கு திரண்ட கூட்டம் வரலாற்று சிறப்புமிக்கது. அவ்வளவு பெரிய மைதானத்தை நிரப்பி மக்கள் ஏகோபித்த ஆதரவை நல்கினர். ஆனாலும் மீண்டும் ஆட்சி அதிகாரத்திற்கு திரும்புவது என்பது அரசியல் மாண்புகளுக்குப் பதிலாக வெளிப்படையான வன்முறைகளும், மிரட்டல்களும் மலிந்த இடத்தில் உண்மையிலேயே சவாலான விஷயம் தான்" என்றார். ஆனால், அரசாங்கமோ கான் ஒரு தேசத் துரோகி எனக் கூறுகிறது. உள்துறை அமைச்சர் ரனா சனாவுல்லா கூறுகையில், "கான் ஒரு விரோதி. அவரை குணப்படுத்த முடியாது" என்று குறிப்பிட்டிருந்தார்.

### தேர்தலில்...

( முன்பக்கத் தொடர்ச்சி...)

ஏப்ரல் மாதத்திற்கான சம்பளத்தை முழுமையாக வழங்க திட்டமிடப்பட்டுள்ளதாக மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்ற இராஜாங்க அமைச்சு தெரிவித்துள்ளது.

மார்ச் மாதத்திற்கான அடிப்படை சம்பளத்தை பெற்றுக்கொடுப்பதற்கான அமைச்சரவை பத்திரம் தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக இராஜாங்க அமைச்சர் ஜானக வக்கும்புர தெரிவித்துள்ளார்.

உள்ளூராட்சி மன்ற தேர்தலில் போட்டியிடுவதற்காக சுமார் 3000 அரச உத்தியோகத்தர்கள் வேட்பு மனுக்களை தாக்கல் செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

### நாடு அபிவிருத்தி...

( முன்பக்கத் தொடர்ச்சி...)

தெரிவித்தார்.

பசுமைப் பொருளாதாரத்திற்கான இலங்கையின் சாத்தியக்கூறுகள் நன்றாக இருப்பதாகவும், இலங்கை உடனடியாக அதில் இறங்கி அதனை ஆரம்பிக்க வேண்டும் என்றும் அவர் கூறினார்.

நாட்டின் வளங்களை அதிகமாக வீணடித்த பெற்றோலியக் கூட்டுத்தாபனம், ஸ்ரீலங்கா எயார்லைன்ஸ் அல்லது மின்சார சபைக்கு ஆதரவளிக்கவன்றி, வறியவர்கள் மற்றும் நலிவடைந்தவர்களின் கல்வி, சுகாதாரம் மற்றும் சமூகப் பாதுகாப்பிற்கே பணம் தேவைப்படுவதாகவும், ஜனாதிபதி இதன்போது தெரிவித்தார்.

டி.எஸ். சேனநாயக்கவின் முன்மொழிவுகளை கட்டியெழுப்பாதது மற்றும் 1965 இல் ஷெனோய் அறிக்கையை நடைமுறைப்படுத்தாதது உட்பட இலங்கையின் அபிவிருத்தியில் தவறவிட்ட வாய்ப்புகளை ஜனாதிபதி எடுத்துரைத்தார்.

1978 இல் இனப்பிரச்சினையானது முன்னேற்றத்தைக் குறைத்தது. மேலும் நாடு மீண்டும் தனது நிலைப்பாட்டை எடுப்பதற்கான வாய்ப்பை இழந்தது.

இதுவே இலங்கைக்கு ஒரு தீர்க்கமான தெரிவை மேற்கொண்டு, முன்னோக்கிச் செல்வதற்கு அல்லது மீண்டும் பின்னோக்கிச் செல்லும் அபாயத்தை எதிர்கொள்வதற்கான கடைசி வாய்ப்பு" என்று அவர் கூறினார்.

சர்வதேச நாணய நிதியத்தின் வேலைத்திட்டத்திற்கு அப்பால் சென்று அடுத்த தலைமுறைக்கு வளமான சமூகத்தை உருவாக்குவதில் கவனம் செலுத்துவது அவசியமாகும்.

ஒருவரையொருவர் குற்றம்சாட்டி நாட்டை வெற்றி பாதைக்கு கொண்டு செல்ல முடியாது எனவும் ஜனாதிபதி அங்கு மேலும் குறிப்பிட்டுள்ளார்.

### சவுதி அரேபியா...

( முன்பக்கத் தொடர்ச்சி...)

தூதுவராலயத்தில் இடம்பெற்ற இந்நிகழ்வில் முஸ்லிம் சமய பண்பாட்டு அலுவல்கள் திணைக்களத்தின் பணிப்பாளர் இஸட்.ஏ.எம் பைசல் மற்றும் உதவிப் பணிப்பாளர் எம.எல். எம். அன்வர் அலி உள்ளிட்டோர் கலந்துகொண்டார்.

இந்த திட்டமானது சவூதி அரேபியாவின் இஸ்லாமிய விவகார, தஃவா மற்றும் வழிகாட்டல் அமைச்சின் கண்காணிப்பின் கீழ் மேற்கொள்ளப்படுகிறது.

### அரசியலமைப்பு...

( முன்பக்கத் தொடர்ச்சி...)

பல விடயங்கள் குறித்து இங்கு கலந்துரையாடப்பட உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தனவின் உத்தியோகபூர்வ இல்லத்தில் இந்த சந்திப்பு இடம்பெறவுள்ளது.

### சவுதி இப்தார்...

( முன்பக்கத் தொடர்ச்சி...)

முஸ்லிம் இயக்கங்களின் பிரதிநிதிகள், ராஜதந்திரிகள் எனப் பெருந்தொகையானோர் இதில் கலந்து கொண்டனர்.

சவூதி அரேபியாவின் இலங்கைத் தூதுவர் காலித் ஹமூத் அல் கத்தானி தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் முதன் முறையாக இலங்கையிலுள்ள ஈரானியத் தூதுவர் கலந்து கொண்டிருந்தார்.

இலங்கைக்கும் சவூதி அரேபியாவுக்கும் இடையிலான உறவு மீண்டும் மலரத் தொடங்கியதை அடுத்து சவூதி அரேபிய, ஈரான் நிகழ்வுகளில் இருநாடுகளின் ராஜ தந்திரிகளும் கலந்து கொள்வது குறிப்பிடத்தக்கது.

# வாழைச்சேனை வை.அஹமட் வித்தியாலயத்தில் பாராட்டு விழா

ஒட்டமாவடி கல்வி கோட்டத்திற்குட்பட்ட வாழைச்சேனை வை.அஹமட் வித்தியாலயத்தில் கடந்த வருடம் 2022ல் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களை பாராட்டி கௌரவிக்கும் நிகழ்வு அண்மையில் 20-03-2023 அன்று பாடசாலையின் கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.







அதிபர் ஷல்மானுல் ஹரீஸ் தலைமையில் நடைபெற்ற ,நிகழ்வில் அதிதிகளாக கோறளைப்பற்று மேற்கு-ஒட்டமாவடி கல்விக் கோட்ட பணிப்பாளரும் மட்டக்களப்பு மத்தி கல்வி வலயத்தின் கல்வி முகாமைத்துவத்துக்குரிய பிரதிக்கல்விப் பணிப்பாளருமாகிய வீ.ரீ.அஜ்மீர்,கிழக்கு பல்கலைக்கழக ,ஸ்லாமிய கற்கைகள் துறை சிரேஷ்ட விரிவுரையாளர் அஷ்ஷெய்க் எம்.ரீ.எம்.றிஸ்வி(மஜீதி),மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் கடமைபுரியும் வைத்தியர் மொஹமட் ஜெஸீர்,,லங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபன பொறியியலாளர் ஏ.எஸ்.ஹஸ்ஸாலி,,லங்கை கிறிக்கெட் சபையின் தேசிய பயிற்றுவிப்பாளராகவும்,நடுவராகவும் தெரிவு செய்யப்பட்டுள்ள சட்டத்தரணி மொஹமட் ஹம்மாத்,வாழைச்சேனை அந்நூர் தேசிய பாடசாலை அதிபர் ஏ.எம்.தாஹிர்,ஜெயந்தியாய அஹமட் ஹிராஸ் வித்தியாலய அதிபர் எம்.ஐ.ஜெயினுலாப்தீன் ஆகியோர் அதிதிகளாக கலந்து சிறப்பித்தனர்.

இந்நிகழ்வில் பாடசாலையில் வெட்டுப்புள்ளியினை கடந்து சித்தியடைந்த 17 மாணவர்களும் தனித்துவமாக கௌரவிக்கப்பட்டதுடன் 100 புள்ளிகளை கடந்த 58 மாணவர்கள் புத்தகப்பை உள்ளிட்ட பெறுமதியான பரிசுப்பொருட்கள் வழங்கி கௌரவிக்கப்பட்டதுடன் 70 புள்ளிகளுக்கு மாணவர்களும் நினைவுச்சின்னங்கள் மற்றும் சான்றிதழ்கள் வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

மாணவர்களது கலை நிகழ்ச்சியுடன் நடைபெற்ற ,நிகழ்வில் கற்பித்த ஆசிரியர்களான பீ.தயாபரன்,எம்.ஐ.நௌபுதீன் மற்றும் ஓய்வு பெற்ற ஆசிரியை ஹனபியா ,ஸ்தீன்,பாடசாலை அதிபர் ஷல்மானுல் ஹரீஸ்,பிரதிக்கல்விப் பணிப்பாளர் ஆகியோர் பாராட்டி கௌரவிக்கப்பட்டனர்.













## அரங்கம்

### 20ஆம் திகதி ரணிலுக்கு மகிழ்ச்சியான நாள்

சர்வதேச நாணய நிதியம் 14ஆவது முறையாக இலங்கைக்கு கடன் வழங்குவதற்கு அங்கீகாரமளித்த நிகழ்வு இவ்வாரத்தில் இடம்பெற்றது. இம்மாதம் 20ஆம் திகதி இலங்கைக்கு முக்கிய ஒரு நாளாக அமைந்தது. இவ்வார அரசியல் நிகழ்வுகளும் இதனை ஒட்டியதாகவே அமைந்திருந்தது.

திங்கள் இரவு சர்வதேச நாணய நிதியத்தின் பணிப்பாளர் சபை கூடியது. இங்கே இலங்கைக்கு 2.9 பில்லியன் டொலர் கடன் வழங்கும் தீர்மானம் எடுக்கப்பட்டது.

இத் தீர்மானம் கிடைக்கும் வரை ஜனாதிபதி இரு நிதி ராஜாங்க அமைச்சர்கள், நிதி அமைச்சின் உயரதிகாரிகள், ஜனாதிபதி காரியாலய அலுவலகத்தில் தங்கியிருந்தனர்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க 20ஆம் திகதி சந்தோஷமாகவே இருந்தார். ஐ.எம்.எப். நிதி கிடைக்கும் என்ற செய்தி இதற்கு முன்பே அவருக்குக் கிடைத்திருந்ததே அதற்குக் காரணமாகும். தன் அலுவலகப் பிரதானி மஹிந்த ஸ்ரீவர்தன மற்றும் மத்திய வங்கியின் அதிபதிக்கு அறிவித்தது. அது தொடர்பான ஆவணங்களை கையொப்பமிட்டு அனுப்பி வைக்குமாறு கேட்டு கேட்டுக்கொண்டார்.

இலங்கையில் இரவாக இருந்த போதும் அமெரிக்காவில் காலை நேரமாக இருந்ததனால், இரவோடு இரவாக ஆவணங்களுக்கு கையொப்பமிட்டு அனுப்புமாறு கேட்டுக் கொண்டார். அதன்படி அடுத்த நாளே முதலாவது கடன் தொகை கிடைக்கக்கூடிய வகையில் ஆவணங்களை அனுப்பி வைத்தார். அடுத்த நாள் ஜனாதிபதி சகலருக்கும் நன்றி தெரிவித்து இன்று முதல் இலங்கை வாங்குரோத் நாடல்ல என்று தெரிவித்தார். ஜனாதிபதி அடுத்த நாள் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கும் அறிக்கையை தயாரிப்பதிலீடுபட்டார். ஜனாதிபதி ஆலோசகர் சமன் அதாவுத ஹெட்டி இந்த அறிக்கையைத் தயாரித்தார்.

ஜனாதிபதியின் செயலாளர் இதனைப் பார்த்து திருத்தங்களை மேற்கொண்டார். மீண்டும் அந்தத் திருத்தத்தை ஜனாதிபதிக்குக் காட்டினார். இது நல்லது.

எல்லோரும் பூத்தட்டில் கை வைப்போம் என்று குறிப்பிட்டு இருப்பது நல்லது தானே! என்று ஜனாதிபதி கூறினார்.

சார்! நாம் ஒரு நல்ல வேலையைச் செய்யும்போது எல்லோரையும் சேர்த்துக் கொள்கிறோம் தானே! இது இலங்கை கலாசாரத்தின் ஓர் அங்கமே என ஜனாதிபதியின் செயலாளர் அதற்குப் பதிலளித்துக் கூறினார்.

### எனது முடிகளும் போய்விட்டது என்கிறார் ஜனாதிபதி

ஐக்கிய தேசியக் கட்சியின் முகாமைத்துவ சபையின் கூட்டம் அன்று மாலை நடைபெற்றது. அதில் கலந்து கொண்ட ஜனாதிபதி ஐ.எம். எப். நிதி விரைவில் பெற்றுக்கொள்ள முடிந்தது என்றார். கட்சி செயற்பாட்டுப் பணிப்பாளர் சமல் செனவிரத்ன, சாகல ரத்னநாயகவைக் காட்டி இதற்காக பெரும் முயற்சி எடுத்தார் என்றார். ஆம்! பெரும் அர்ப்பணத்துடன் செயற்பட்டார். இறுதியில் முடியும் போனதும் என்று குறிப்பிட்ட போது எல்லோரும் சிரித்தனர்.

சர்வேச நாணய நிதியத்துடனும் அமெரிக்க ராஜாங்க செயலாளருடனும் பிரத்யேகமாகத் தொடர்பு கொண்டு பேசுவதற்கு அமெரிக்காவிலிருந்து உதவிய அமெரிக்கத் தூதுவர் மஹிந்த சமரசிங்க மற்றும் பாலித கொஹனே ஆகியோருக்கும் கட்டுக் கணக்கில் ஆவணங்களைத் நிதி அமைச்சின் செயலாளர் தயாரித்தார் என்றும் ஜனாதிபதி கூறினார். ஐ.தே.க. மே தினத்தை எவ்வாறு கொண்டாடுவது என்பது பற்றியும் ஆராயப்பட்டது. இது தொடர்பாக அறிக்கை ஒன்றை ஜனாதிபதிக்குச் சமர்ப்பிப்பதாக கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது.

### மருதானையில் பட்டாசு வெடிப்பு

கடன் வசதி கிடைத்ததற்கு மருதானையில் சுமார் ஐந்து லட்சம் ரூபாய் பெறுமதியான பட்டாசுகள் கொழுத்தப்பட்டன. ஐ.தே.க. மாநகர சபை உறுப்பினர் சொப்பே அதற்கான ஏற்பாடுச் செய்திருந்தார். நாட்டின் ஏனைய பகுதிகளில் பட்டாசு கொழுத்தப்படவில்லை. மருதானையில் ஐ.தே.க. முன்னாள் மாநகர சபை உறுப்பினர்கள் பலரும் இதன் போது பிரசன்னமாயிருந்தனர்.

### நான்கு முறை ஆதரவு கேட்டேன் இனியாவது மலர் தட்டு கையை வைப்பார்களா

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க புதனன்று பாராளுமன்றத்தில் ஐ.எம். எப் அறிக்கையைச் சமர்ப்பித்தார். எதிர்க்கட்சி இது தொடர்பாக விவாதம் ஒன்றைக் கோருவார்கள். அதனை இன்றே வழங்குங்கள் என்று ஜனாதிபதி அரசு தரப்பு பிரதம அமைப்பாளர் பிரசன்ன ரணதுங்கவுக்கு கூறினர்.

இதன்படி ஜனாதிபதியின் அறிக்கை சமர்ப்பித்த தினமே விவாதத்துக்கு இடமளிக்கப்பட்டது. மூன்று நாட்களாக விவாதம் இடம்பெற்றது. ஜனாதிபதி தனதுரையின் போது எதிர்க்கட்சியிடம்

நான்கு முறை அரசு ஆதரவு கோரியுள்ளேன். இம்முறையாவது மலர்த் தட்டுக்கு கையை வையுங்கள் என ஜனாதிபதி வேண்டுகோள் விடுத்தார். பழையவற்றை மறந்து ஆதரவு வழங்குமாறு ஜனாதிபதி கோரிக்கை விடுத்தார். எது சொன்னாலும் இவர்கள் இணைய மாட்டார்கள் எனவும் இவர்களுக்கு இருப்பது பதவி ஆசை எனவும் ராஜாங்க அமைச்சர் கூறிய போது, ஜனாதிபதி சிரித்துக்கொண்டே எதிர்க்கட்சி லொபியின் பக்கம் சென்றார். ஒப்பந்தத்தின் பிரதிகளைத் தந்ருந்ததால் அநேக பிரச்சினைகளைத் தீர்த்திருக்கலாம் என்று எதிர்க்கட்சி உறுப்பினர் ஒருவர் கூறிய போது, கடனுக்கான அங்கீகாரமளிக்கும் வரை கொடுக்க வேண்டாம் தெரிவித்திருந்தார்கள் என ஜனாதிபதி தெரிவித்தார்.

இப்போது உங்களுக்கிருப்பது எனக்கு ஆதரவு வழங்குவதாகும். எதிர்க்கட்சித் தலைவர் இருக்கின்றார் தானே! ஜனாதிபதி எதிர்க்கட்சி எம்.பி.க்களிடம் கூறினார். எதிர்க்கட்சி லொபியில் கூடுதலான நேரம் தங்கியிருந்த ஜனாதிபதி, எம்.பி.க்களுடன் ஜோக்காகப் பேசி மகிழ்ச்சியாக இருந்தார்.

# 20ஆம் திகதி ரணிலுக்கு மகிழ்ச்சியான நாள்



சாகல ரத்னாயக்க, செயலாளர் சமன் ரத்னாயக்க, அரச தகவல் திணைக்களப் பணிப்பாளர் நாயகம் தினித சிந்தக கருணாரத்ன மற்றும் ஜனாதிபதி ஊடகப் பிரிவின் பணிப்பாளர் நாயகம் தனுஷ்க ராமநாயக்க ஆகியோரை அழைத்து, தான் புதனன்று பாராளுமன்றத்தில் விசேட அறிக்கை ஒன்றை விடுப்பதாகத் தெரிவித்தார். கலந்துரையாடலின் போது தனுஷ்கவும் தினித்தும் பாராளுமன்றத்தில் அறிக்கை வெளியிட முன் செவ்வாயன்று மக்களுக்காக ஓர் அறிக்கையை வெளியிடுமாறு கேட்டுக் கொண்டனர். அதற்கு இணங்கிய ஜனாதிபதி செவ்வாயன்று ஒரு சிறு அறிக்கையை வெளியிடுவதாகத் தெரிவித்தார். அத் தினத்தன்று மாலை நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் இலங்கைக்குக் கடன் கிடைக்கவுள்ளதாக ஜனாதிபதி அறிவித்தார்.

அமைச்சர்கள் கரகோஷம் செய்து தமது மகிழ்ச்சியைத் தெரிவித்தனர். நாம் 17 முறை ஐ.எம்.எப்பிடம் சென்றுள்ளோம். இது 18 ஆவது முறை. மீண்டும் கடன் பெறாத நாடாக இலங்கையை மாற்றுவதற்கு 25 வருட திட்டத்தின் படி செல்ல வேண்டியுள்ளது என ஜனாதிபதி கூறினார்.

### சாதகமான தகவல்களை வழங்குமாறு ரணில் எம்.பி.க்களிடம் கோரிக்கை

அதே தினம் அரச பாராளுமன்றக் குழுக் கூட்டம் நடைபெற்றது. ஐ.எம். எப். கடன் தொடர்பாக மக்களுக்குச் சாதகமான தகவல்களை வழங்குமாறு கேட்டுக் கொண்டதோடு, தான் இது தொடர்பாக பாராளுமன்றத்தில் அறிக்கை ஒன்றை விடுப்பதாகவும் அது தொடர்பாக எதிர்க்கட்சியினர் விவாதம் ஒன்றை கோருவர் என்றும் அதற்குத் தயாராகுமாறும் கற்றுக் கொண்டார்.

### இனி இலங்கை வங்குரோத் நாடல்ல

அன்று இரவே ஐ.எம்.எப்பின் பணிப்பாளர் சபை கடன் வசதியை வழங்குவதற்கு அங்கீகாரமளித்தது. ஜனாதிபதி திரைசேரிச் செயலாளர்

### பி.எம்.ஐ.சி.எச்சில் நடந்த பாகிஸ்தான் தேசிய தின விருந்துபசாரம்

பாகிஸ்தான் இஸ்லாமிய குடியரசின் தேசிய தினமும் இலங்கையுடனான இருதரப்பு உறவினை ஆரம்பித்து 75 வருடங்கள் ஆவதனையிட்டு பாகிஸ்தான் தூதுவராலயம் ஏற்பாடு செய்திருந்த வரவேற்புபசாரம் இம்முறை பண்டநாயக்க மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

பொருளாதார நெருக்கடியை எதிர்கொண்டுள்ள பாகிஸ்தானில் வீண் செலவுகளைத் தவிக்குமாறு பாகிஸ்தான் பிரதமர் அண்மையில் சுற்று நிருபம் ஒன்றை விடுத்திருந்தது குறிப்பிடத்தக்கது.

வழமையாக உல்லாச ஹோட்டலில் நடைபெறும் விருந்துபசாரம் இம்முறை பி.எம்.ஐ.சி.எச். இல் சம்மர் பங்குவட் மண்டபத்தில் நடைபெற்றது.

பாகிஸ்தானின் உயர்ஸ்தானிகர் மேஜர் ஜெனரல் இளைப்பாறிய உமர் பாரூக் புர்கி தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் அமைச்சர் மஹிந்த சமரவீர பிரதம அதிதியாகக் கலந்து கொண்டார். முன்னாள் ஜனாதிபதிகளான மஹிந்த ராஜபக்,ஷ மைத்திரிபால சிறிசேன உட்பட அரசு தரப்பு, எதிர்க்கட்சித் தரப்பு பாராளுமன்ற உறுப்பினர்கள், அமைச்சர்கள், படைத்தளபதிகள், வர்த்தக சமூகப் பிரதிநிதிகள் என நூற்றுக்கணக்கான அழைப்பாளிகள் கலந்து கொண்டிருந்தனர். இலங்கைக் கலைஞர்களது இசை நிகழ்ச்சி ஒன்றும் இடம்பெற்றது. சிங்கள, உருதுப் பாடல்களும் இடம் பெற்றன.

NEWS PLUS
WWW.NEWSPLUS.LK
2023 APRIL 01 - SATURDAY

Email: editor@newsplus.lk
FB: newsplustamil

# கடன் கிடைத்தாலும் தேர்தலுக்கு பயன்படுத்த அரசாங்கம் தரயார் இல்லை

பொருளாதார நெருக்கடியில் இருந்து இலங்கையை மீட்பதற்காக 04 வருட காலப்பகுதிக்குள் கட்டம் கட்டமாக கிடைக்கும் வகையில் ஒரு இலட்சம் கோடி ரூபாய்களை(300 கோடி ஐக்கிய அமெரிக்க டாலர்கள்) நிபந்தனையுடனான கடனாக வழங்க சர்வதேச நாணய நிதியம் 2023 மார்ச் 20 ஆம் திகதி அங்கீகாரம் வழங்கியது. அதன் படி முதற்கட்டமாக 10500 கோடி (33 கோடி 30 இலட்சம் டாலர்கள்) ரூபாய்களை வழங்கவும் இணக்கம் காணப்பட்டிருக்கின்றது. இந்த செய்தியை அறிந்தவுடன் ஆளும் கட்சி ஆதரவாளர்கள் நாட்டின் பல பாகங்களில் பட்டாசு கொளுத்தி மகிழ்சியை வெளிப்படுத்தி ஆரவாரம் செய்தனர். அந்தளவிற்கு மகிழ்ச்சி பொங்குகின்றது.

2022 ஆகஸ்ட் மாதமளவில் ஆரம்பிக்கப்பட்ட பேச்சுவார்த்தைகளின் பிரதி பலனாக இந்த கடன் ஒப்புதல் கிடைத்திருக்கின்றது. ஏற்கனவே இலங்கை மத்திய வங்கியில் இருக்க வேண்டிய சிறப்பு எடுப்பு ஒதுக்கு (ளுனுசு) 450 அமெரிக்க டாலம் வரையில் வீழ்ச்சி கண்டதால் நாட்டில் பாரிய பொருளாதார நெருக்கடி ஏற்பட்டு கடந்த 2022 மே மாதம் முதல் இலங்கை ரூபாவின் மதிப்பு வீழ்ச்சி கண்டதோடு 133 ரூபாவுக்கு இருந்த ஐக்கிய அமெரிக்க டாலர் ஒன்றின் பெருமதி 366 வரை உயர்வடைந்து சென்றது. அதன் விளைவாக உள்நாட்டில் பொருளாதார வாள்ச்சி வீதம் எதிர் முறண் நிலைக்கு சென்று அதள பாதாளத்தில் வீழ்ந்தது. பண வீக்கம் 66மூ வரை உயர்வடைந்தது. இந்த கடனில் சுமார் 4000 கோடி ரூபா அளவில் (112 மில்லியன் அமெரிக்கா டபலர்) ஏற்கனவே இந்தியாவிடம் வாங்கி இருந்த கடனை மீளச் செலுத்த 2023 மார் 24 ஆம் திகதி செலுத்தப்பட்டிருக்கின்றது.

இவ்வாறான ஒரு நிலையில் இலங்கைக்கு தேவையான எரிபொருள், எரிவாயு, மருந்து வகைகள், அத்தியாவசிய உணவுப் பொருட்களான சீனி, பருப்பு உட்பட பலவகையான பொருட்களை இறக்குமதி செய்ய இலங்கை மத்திய வங்கியில் அமெரிக்க டாலர் இல்லாமல் திறைசேரி காலியானதால் நாட்டில் அனைத்து பொருட்களதும் விலைகள் 300மூ வீதம் அதிகரித்து சென்றது. இப்படியான பொருளாதார நெருக்கடியில் இருந்து மீள ஒரே வழி சர்வதேச நாணய நிதியத்திடம் மண்டியிடுவதுதான் என்று கோதாபய ராஜபக்ஷ நாட்டை விட்டு ஓடிய பின்னர் ஜனாதிபதியான ரனில் விக்கிரமசிங்கா தீர்மானித்தார்.

அதற்கமைவாக 2022 ஆகஸ்ட் மாதமளவில் சர்வதேச நாணய நிதியத்தின் பிரதிநிதிகள் இலங்கைக்கு விஜயம் செய்து நிலைமைகளை ஆராய்ந்து பல கோணங்களில் அறிக்கைகளை தயாரித்தனர். அதிலும் ஏற்கனவே இலங்கைக்கு கிட்டத்தட்ட 570 கோடிக்கு மேல் கடன் வழங்கியுள்ள சீனாவும் 450 கோடி அமெரிக்க டாலருக்கு மேல் கடன் வழங்கியுள்ள இந்தியாவும் இந்த கடன்களுக்கான வட்டி அறவிடலை மீளாய்வு செய்து அதற்கான பிற்படுத்தப்பட்ட கால நிர்ணயத்தை அறிவிக்க வேண்டும் என்று சர்வதேச நாணய நிதியம் கோரி இருந்தது. அந்த கோரிக்கைக்கு அமைவாக சீனா, இந்தியா, ஜப்பான், பரிஸ் கூட்டமைப்பு ஆகிய நாடுகள் இலங்கைக்கு ஏற்கனவே பெற்றுள்ள கடன் அறவிடலுக்கு சலுகை வழங்கியதால் சர்வதேச நாணய நிதியம் நிபந்தனைகளை விதித்து இவ்வாறாக 05 வருட காலப்பகுதிக்குள் அண்ணலவாக 200,000 (இரண்டு இலட்சம்) கோடி ரூபா அதாவது 700 கோடி ஐக்கிய அமெரிக்க டாலர்கள் வரையான கடனை வழங்க அங்கீகாரம் வழங்கி இருக்கின்றது.

இந்நிலையில் ஏற்கனவே ஏப்ரில் மாதம் 25 ஆம் திகதி நடத்த திட்டமிடப்பட்டிருந்த உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தலை நடத்தும் நிலையில் அரசாங்கம் இல்லை. இவ்விடயத்தில் 2023 ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்டத்தில் ஒதுக்கப்பட்ட 1000 கோடி ரூபாய்களை நிதி அமைச்சு மற்றும் திறைசேரியில் இருந்து விடுவிப்பதில் அரசாங்கம் தொடர்ந்து இழுத்தடிப்பு காட்டி வருகின்றது. ஜனாதிபதி ரனில் விக்கிரமசிங்கா தற்போதைக்கு தேர்தலை விட நாட்டை நெருக்கடியில் இருந்து மீட்டு பொருளாதார சுபீட்சத்தின்பால் கொண்டு போவதே இலக்கு என்று பிடிவாதமாக உள்ளார். அப்படியான ஒரு நிலையில் தேர்தல் என்ற பேச்சுக்கே இடமில்லை.

ஆத்துடன் தற்போது கிடைத்துள்ள 10500 கோடி ருபா கடனில் 4000 கோடி இந்திய கடன் செலுத்தப்பட்ட பின்னர் எஞ்சியுள்ள தொகையால் என்ன செய்ய திட்டமிடப் பட்டிருக்கின்றது என்ற விடயம் பிரதானமாக அமைகின்றது. ஏற்கனவே ஊழல் மோசடிகள் மழிந்து போன இந்த நாட்டில் தொடர்ந்தும் அபிவிருத்தி அல்லது பொருளாதார மீட்சி திட்டங்கள் என்று திட்டங்களை முன்வைத்து அரச அதிகாரிகளும் அமைச்சர்களும் ஊழலில் ஈடுபட்டால் நாட்டை மீட்டெடுக்க முடியாது. தேர்தல் என்ற மக்களது ஜனநாயக உரிமைக்கு ஆப்பு வைத்து விட்டு தொடர்ந்தும் ஊழலிலும் சுரண்டலிலும் ஈடபட்டு நாட்டை நாசமாக்கினால் அடுத்த கட்டமாகவும் நெருக்கடிகளையு் பாதிப்புக்களையும் அனுபவிக்க இருப்பது அப்பாவி பொது மக்களே.

உடனடியாக இந்தியாவுக்கு சர்வதேச நாணய நிதியத்திடம் இருந்து கடன் வாங்கி கடன் கொடுப்பது போன்று சர்வதேச நாணய நிதியத்தால் வாங்கும் கடனையும் எதிர்காலத்தில் செலுத்தும் சுமையை தாங்க இருப்பதும் இந்நாட்டு பிரசைகளாவர். அவர்கள் மீதே இந்த கடன் சுமை போடப்படுகின்றது. ஒன்றில் வரியாக அல்லது பொருட்கள் சேவைகளுக்கான விலைகள், கட்டண அதிகரிப்பாக மக்கள் மீது இந்த கடன் சுமை திணிக்கப்பட இருக்கின்றது. அதனால் இனியாவது அரசாங்கம் மிகவும் முன்னெச்சரிக்கையாக நடந்து கொள்ள வேண்டி இருக்கின்றது. வேலியே பயிரை மேயும் நிலை இருக்கக் கூடாது. ஊழலில் இருந்து பாதுகாத்து வளமான தேசமாக கட்டியெழுப்ப சரியான தீர்மானங்களுடன் தூர நோக்கிலான திட்டங்களே கைகொடுப்பதாக அமையும்.



அஸ்ஹர் அன்ஸார் FRSPH (UK)
மனோதத்துவ ஆலோசனை நிபுணர்
மனோதத்துவ எழுத்தாளர்

## மனநலமும் ஆலோசனையும்

# நோன்பும் மன ஆரோக்கியமும்

நோன்பு பலவிதமான உல உடல் நன்மைகளை தருவது பற்றி நாம் அறிவோம்.

நோன்பு உடலிலுள்ள கலங்களை சுத்தம் செய்வதாகவும் பயம், மனப்புழுக்கம், கவலை, பதற்றம், மனஉழைச்சல், அழுப்புத்தன்மை போன்ற மனதிற்கு ஏற்படும் பல உணர்ச்சி சார்ந்த கோளாறுகளை அகற்றிவிடுவதாகவும் ஆய்வுகள் குறிப்பிடுகின்றன.

நோன்பிருக்கும் போது நச்சுப்பொருட்கள் மூளையிலிருந்து நீக்கப்படுவதனால் பல காரணங்களினால் உருவான பாதிப்புகளிலிருந்து மனம் விடுதலை பெருகிறது. அதாவது மனம் அமைதியை, ஆறுதலை அனுபவிக்கிறது என்பது ஆய்வாளர்களின் உறுதியான கருத்தாகும்.

இன்று மனக்கோளாறுகளால் பாதிக்கப்பட்ட பலர் அதிலிருந்து மீள பலவகை மருந்துகளை உபயோகித்து வருவதை காண்கிறோம். நோயின் தீவிரத்தன்மைக்கு ஏற்ப மருந்து பாவிக்க வேண்டிய தேவையிருந்தாலும் மருந்து மாத்திரைகள் மனநிலையில் மாற்றத்தை ஏற்படுத்துவது போன்று நோன்பு நோற்பதன் மூலம் மனம் அமைதியடைவதாகவும் மனநிலையில் நல்ல மாற்றம் ஏற்படுவதாகவும் கண்டறியப்பட்டுள்ளது.

நோன்பு மனதைக் கூர்மையாக்கி மனதை ஒருமுகப்படுத்த துணைபுரிகிறது என அதுபற்றி ஆய்வு செய்தவர்கள் கூறுகின்றனர்.

நோன்பு நோற்பதன் மூலம் உடலிலுள்ள நச்சுக்கள் துப்பரவாகி, மாசுகள் அகற்றப்பட்டு மூளைக்கு போதியளவு சுத்தமாக்கப்பட்ட இரத்தம் கிடைப்பதன் மூலம் மனம் தெளிவடைகிறது. சிந்தனை அழகடைகிது. உடலை மீண்டும் உட்சாகமூட்டி உள்ளத்தை அமைதியடையச் செய்வதற்கான மிகவும் பொருத்தமானதும் சரியானதுமான இயற்கைமுறை நோன்பு நோற்பதாகும் என மருத்துவ விஞ்ஞானத்தின் மூலம் உறுதிசெய்யப்பட்டுள்ளது.

எமது உணர்ச்சிகள், தூண்டல்கள் மற்றும் செயல்களை கட்டுப்படுத்தும் திறனை நோன்பு தருகிறது.

நோன்பு ஒரு இயற்கை மருத்துவக் குணமாக்கியாக இருக்கிறது. என் நவீன மருத்துவ ஆய்வுகள் எடுத்துக் கூறுகின்றன.

நோன்பு எமக்குள் அமைதி, அடக்கம், சந்தோசம், உட்சாகம், போன்ற அழகான மனஉணர்வுகளை அனுபவிப்பதற்கான மகிழ்ச்சி ஹார்மோன்களை உற்பத்தி செய்ய துணைபுறிகிறது. அத்துடன் மனதை வலுவடையும் செய்கிறது.

இந்த சங்கடமான காலத்தில் மனதை வலுவானதாகவும் ஆரோக்கியம் நிறைந்ததாகவும் ஆக்கிக் கொள்ள நோன்பு சிறந்த வாய்ப்பாக உள்ளது.

ஆரோக்கியமான ஆகாரங்களை அளவாக உண்டு நோன்பு நோற்று எமது உடலும் உள்ளமும் இந்த அற்புதமான இயற்கை அருளுடன் சேர்ந்து குணம் பெற வழிவகுத்துக் கொள்வோம்.

---

# இறக்காமம் வில்லு குளத்தில் நண்ணீர் மீன் பிடியில் இருந்த நீண்டகால பிரச்சனைக்கான தீர்வு!








(நூருள் ஹுதா உமர்)

தேசிய சமாதான பேரவையின் அனுசரணையின் கீழ் "றுஹூணு லங்கா" நிறுவனத்தின் தலைவர் எம்.எஸ்.ஜெளபர் (நளீமி) அவர்களின் ஏற்பாட்டில் இறக்காமம் வில்லு குளத்தில் நன்னீர் மீன் பிடியில் இருந்த நீண்டகால பிரச்சனைக்கான தீர்வு, அதற்கான அங்கத்துவம் மற்றும் அனுமதியும் பெற்றுக் கொடுக்கும் நிகழ்வு இறக்காமம் பிரதேச செயலக கூட்ட மண்டபத்தில் இறக்காமம் பிரதேச செயலாளர் எம்.எஸ்.எம். றஸ்ஸான் (நளீமி) இனால் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இந்நிகழ்வில் உதவி பிரதேச செயலாளர் எம்.ஏ.சி.அஹமட் நஸீல், மற்றும் தேசிய சமாதன பேரவையின் சிரேஷ்ட திட்ட முகாமையாளர் அமில நுவான் மதுசங்க, தேசிய சமாதான பேரவையின் திட்ட முகாமையாளர் எம்.உவைஸ் மதானி (இஸ்லாஹி), றுஹூனு லங்காவின் உயர்மட்ட உறுப்பினர்கள் உள்ளிட்ட காரியாலய உத்தியோகத்தர்கள் நன்னீர் மீன்பிடி சங்க நிருவாகங்கள் மற்றும் இரு சமூகங்களின் சகோதரர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

கடந்த மாதம் இப்பிரதேசத்தில் நடைபெற்ற மாவட்ட ரீதியிலான தேசிய சமாதன பேரவையின் கூட்டத்தில் பிரதேச செயலாளர் மற்றும் உதவி பிரதேச செயலாளர் முன்வைக்கப்பட்ட இம் முன் மொழிவினை றுஹூனு லங்கா நிறுவனமும் தேசிய சமாதான பேரவையும் நிறை வேற்றியுள்ளது.

இறக்காமம் வில்லு குளத்தை அண்டிய குடிவில் மற்றும் மாணிக்கமடு பிரதேசத்தில் வாழ்கின்ற தமிழ் மக்களுக்கு மீனவர் சங்கங்களில் அங்கத்துவம் இல்லாததால் அவர்களுக்கான நன்னீர் மீன் பிடித்தலுக்கான அனுமதி மறுக்கப்பட்டு வந்தது.

இதனால் நீண்ட காலமாக இரு இனங்களுக்குள் கானப்பட்ட நன்னீர் மீன்பிடிக்க தேவையான அனுமதிப்பத்திரம் இல்லாத பிரச்சனைக்கு தீர்வு பெற்றுக் கொடுத்து அம்மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த வேண்டும் என்ற நன்நோக்கத்தோடு இறக்காமம் பிரதேச செயலாளர் மற்றும் உதவி பிரதேச செயலாளர் ஆகியோர்களினால் மேற்கொண்ட முயற்சியின் பயனாக பதிவு செய்யப்பட்டுள்ள நன்னீர் மீன்பிடி சங்கங்களுக்கு மத்தியில் பல சுற்று பேச்சு வார்த்தைகள் இடம் பெற்று இறுதியாக கடந்த 2023.03.22 ஆம் திகதி தமிழ் மக்களுக்கு மீனவ அங்கத்துவமும் அனுமதி பத்திரமும் வழங்குவதற்கு அனைத்து ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டது.

---

## எல்லை...

( முன்பக்கத் தொடர்ச்சி...)

இரு மருங்கிலும் அறிவித்தலாக அமைக்கப்பட்டிருந்த புன்னைக்குடா வீதி என்ற பெயர்ப் பலகை அகற்றப்பட்டிருக்கிறது.

இந்த அறிவித்தல் வெளியாகி ஏறாவூரில் பதற்றம் ஏற்பட்டதைத் தொடர்ந்து கிழக்கு மாகாண முன்னாள் முதலமைச்சரும் தற்போதைய சுற்றாடல்துறை அமைச்சருமான நஸீர் அஹமட் ஊடக அறிக்கையொன்றை வெளியிட்டிருந்தார்.

அதில், பாரம்பரியமாக புன்னைக்குடா வீதி என இருந்து வரும் பெயர் மாற்றம்பெறாது. பெயர் மாற்ற செயற்பாடுகளை உடன் நிறுத்துவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. இத்திடீர் பெயர்மாற்ற செயற்பாடானது கண்டிக்கத்தக்கதோடு ஆளுநரின் அதிகார எல்லையை மீறும் செயற்பாடாகும். இவ்வாறான நடவடிக்கைகளை தொடர்ந்து மேற்கொள்வதை ஆளுநர் உடனடியாக நிறுத்த வேண்டும்." என்று தெரிவித்திருந்தார்.

கொழும்பு - மட்டக்களப்பு நெடுஞ்சாலையில் ஏறாவூர் நகரிலிருந்து சுமார் 5.23 கிலோமீற்றர் தூரத்தில் புன்னைக்குடாக் கடல் அமைந்திருக்கிறது. இது வங்காளக் கடல் பகுதியாகும். ஆங்கிலேயர் காலத்திற்கு முன்பிருந்தே பூர்வீகமாக இந்த வீதி புன்னைக்குடா வீதி என்றே அழைக்கப்பட்டு வந்திருக்கிறது. புன்னை மரங்கள் அங்கு அதிகமிருந்ததால் இது காரணப் பெயராகியுள்ளது. புன்னைக்குடா வீதி ஏறாவூர் நகர், ஐயங்கேணி, அப்துல் மஜீத் மாவத்தை, அத்துப்பிட்டி, தளவாய் ஆகிய முஸ்லிம் தமிழ்க் கிராமங்களை ஊடறுத்துச் செல்கின்றது.

ஏறாவூர் நகர பிரதேசம் நூறு சத வீதம் முஸ்லிம் சமூகத்தைக் கொண்டமைந்திருந்தபோதும் கூட அந்த வீதிக்கு முஸ்லிம் சமூகத்தைச் சேர்ந்த எவரினதும் பெயரைச் சூட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. ஆனால், திடீரென தென்பகுதி காலிப் பிரதேச சிங்கள சமூகத்தைச் சேர்ந்த 9 பேர் ஆளுநருக்கு ஒரு கடிதத்தை எழுதியுள்ளனர். அதில் ஏறாவூர் புன்னைக்குடா வீதிக்கு "எல்விஸ் வல்கம" என பெயரை மாற்றுமாறு கோரியுள்ளனர்.

அந்த வேண்டுகோளை உடனடியாக அமுல்படுத்தும் நடவடிக்கையில் ஆளுநர் இறங்கி உத்தரவையும் பிறப்பித்துள்ளார்.

காலியைச் சேர்ந்த சிங்கள சமூகத்தவர் அந்த 9 பேரும் விடுத்துள்ள வேண்டுகோளில் "காலி தல்பே கிராமத்தில் பிறந்து தனது 12வது வயதில் ஏறாவூருக்குப் போய்ச் சேர்ந்து அங்கே வர்த்தகம் செய்து நிலபுலன்களையும் வாங்கியதுடன் இன்னும் பல சேவைகளைச் செய்த "எல்விஸ் வல்கம" அவர் காலியின் பெருமைக்குரிய புதல்வனாகும். எனவே அவரது பெயரை ஏறாவூர் புன்னைக்குடா வீதிக்குச் சூட்ட உடன் நடவடிக்கை எடுக்குமாறு ஆளுநரைக் கேட்டுக் கொள்கிறோம் என்று எழுதப்பட்டுள்ளது.

ஆளுநர் ஏற்கெனவே ஏறாவூர் பொதுச் சந்தையை "ஏறாவூர் சிங்களச் சந்தை" எனக் குறிப்பிட்டு ஏறாவூர் நகர சபைக்கு கடிதம் அனுப்பியிருந்ததும் அது ஆளுநரது உத்தியோக பூர்வ வலைத் தளத்தில் வெளியாகி பெருத்த சர்ச்சையை ஏற்படுத்தியவுடன் ஆளுநர் அந்த வார்த்தைப் பிரயோகத்தை மாற்றிக் கொண்டதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

மேலும் மக்கள் பிரதிநிதிகள் இல்லாத மாகாண சபை நிருவாகக் காலத்திலும் உள்ளூராட்சி மன்ற நிருவாகம் கலைக்கப்பட்டிருக்கும் தறுவாயிலும் சந்தர்ப்பத்தைப் பார்த்து கிழக்கு மாகாண ஆளுநரின் நடவடிக்கைககள் முற்றுமுழுவதுமாக சிங்கள பேரினவாத அமுல்படுத்தலை யைமப்படுத்தியதாக இடம்பெற்று வருவதாக அதிருப்தி தெரிவிக்கப்படுகிறது.

இதற்கு முன்னர் கிழக்கு மாகாண ஆளுநர்களாக படை அதிகாரிகள் மற்றும் சிங்கள சமூகத்தைச் சேர்ந்தோரே நியமிக்கப்ட்டிருந்தபோதும் தற்போதைய ஆளுநரைப் போன்று அவர்கள் நேரடியான சிங்கள மயமாக்கலை நோக்கி செயற்படவில்லை என்றும் தெரிவிக்கப்படுகிறது.

இதுவரை இடம்பெற்றுள்ள நடவடிக்கைகள்,

இது விடயமாக ஏறாவூர் நகர பிரதேச செயலாளர் ஏறாவூர் நகர சபைச் செயலாளருக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்தில்

ஏறாவூர் புன்னக்குடா வீதி "எல்மிஸ் வல்கம" வீதி எனப் பெயர் மாற்றல். வீதி அபிவிருத்தித் திணைக்களத்தினால் எமக்கு அனுப்பி வைக்கப்பட்ட கடிதம் சார்பாக ஏறாவூர் புன்னக்குடா வீதியினை "எல்மிஸ் வல்கம" வீதி என பெயர் மாற்றம் செய்தல் தொடர்பாக கெளரவ ஆளுநர் அலுவலகம் மற்றும் ஏனைய திணைக்களங்களின் கடிதப் பிரதிகள் தங்களது மேலதிக நடவடிக்கைகளுக்கா இத்துடன் இணைத்து அனுப்பி வைக்கப்படுகின்றது. என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

மாகாண வீதி அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் மற்றும் திட்டமிடல் பணிப்பாளர் ஆகியோரால் வீதி அபிவிருத்தித் திணைக்களத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ள கடிதத்தில் ஏறாவூர் நகரப் பிரிவில் "எல்மிஸ் வல்கம" என பெயர் மாற்றம் தொடர்பாக தேவையான நடவடிக்கைகளை எடுக்குமாறு கேட்டுக் கொண்டுள்ளனர்.

# சர்வதேச சந்தைப் புலமைகளுக்கு இளைஞர்களை தயாராக்கும் அரசியல்!



சுஐப்,எம்,காசிம்

சர்வதேச அரசியலில் ஜனாதிபதிக்கு கிடைத்துள்ள அங்கீகாரம் அவரது உள்ளூர் அரசியலுக்கு உதவுமா? இந்தக் கோணத்தில்தான் இனி அரசியல் களம் நகரவுள்ளது. 'காலி முகத்திடல் ஆர்ப்பாட்டங்களால் சகலரதும் ஆரவாரங்கள் அரசியலில் அடங்கிப்போகும், இனி எஞ்சியுள்ளது மற்றொரு ஆட்சிக்கான சந்தர்ப்பம்தான்' என்றெண்ணியிருந்தன சில கட்சிகள். மக்களின் ஆணையுடன் முறையான அரசியல் மாற்றங்கள் ஏற்படாது, எந்த அதிகாரங்களையும் பொறுப்பேற்பதில்லை எனவும் சில கட்சிகள் கர்ஜித்தன. ஆனால், நட்டாற்றில் நாட்டு மக்களை கைவிட விரும்பாத ரணில் விக்ரமசிங்க அழைப்பை ஏற்றார், அயராது உழைத்தார், இப்போது அர்த்தமும் தந்திருக்கிறார். மக்கள் ஆணையில்லாத இந்த அரசுக்கு எந்த ஆதரவும் கிடைக்கக் கூடாதென்ற சித்தாந்தத்தில் சுழன்றுகொண்டிருந்த அரசியல் கட்சிகளுக்கு சிந்திக்கக் கிடைத்துள்ள சந்தர்ப்பம் இது.


கடனை மீளத் திருப்பித் தருவதற்கு இயலாத நாடு இலங்கை என்ற ஏளனப் பார்வையிலிருந்து நமது நாட்டை மீட்டது யார்? கடனுக்கு மேல் கடன் சுமையிலிருந்த இலங்கைக்கு மீண்டும் கடன் வசதியைக் கொண்டுவர உதவியது எவருடைய இராஜதந்திரம்? சிறுபான்மை சமூகத்துக்கு எதிரான அரசியலுக்குப் பின்னாலிருப்பதாகக் காட்டப்பட்ட ரணில் விக்ரமசிங்க, இது இவ்வாறில்லை என்பதை நிரூபித்தது எப்படி? இப்படி வினாக்களை அடுக்க வைத்துள்ளன இவ்வுதவிகள். சர்வதேச நாணய நிதியத்திடம் செல்வது நாட்டின் இறைமையை ஆதிக்க சக்திகளுக்கு அடகு வைத்துவிடும் என்ற அச்சத்தில் தென்னிலங்கை இருக்கையில்தான் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க அங்கு சென்றார். சீன, இந்திய ஒத்துழைப்புக்கள் சர்வதேசத்தில் இலங்கையின் "இமேஜை" உயர்த்தும் என்பதில் ரணிலுக்கு இருந்த தெளிவுபோல் எவரிடமும் இருக்கவில்லை. இதனால், ஏனைய உள்ளூர்ப் பீதிகளுக்கு இடமளிக்காது பயணித்தார், பணம் பெற்று வந்துள்ளார்.

நான்கு வருடங்களுக்குள் சர்வதேச நாணய நிதியம் தரத் தீர்மானித்துள்ள மூன்று பில்லியன் அமெரிக்க டொலரில், தற்போது 330 மில்லியன் அமெரிக்க டொலர் கிடைத்துள்ளது. இன்னும், ஏனைய நாடுகள், நிறுவனங்களிடமிருந்து கிடைக்கவுள்ள ஏழு பில்லியன் டொலரை எவ்வாறு பெறுவது? பெற்றால் எப்படிக் கொடுப்பது? இது பற்றித்தான் நாம் சிந்திக்க வேண்டும்.

அத்தியாவசியப் பொருட்கள் மற்றும் சேவைகளின் விலைகளைக் குறைப்பதற்கும், அந்நியச் செலாவணி வைப்பை உயர்த்தவும்தான் இந்நிதிகள் பயன்படுத்தப்படவுள்ளன. திறைசேரியின் வைப்பில் வெளிநாட்டுப் பணங்களை அதிகரிப்பதனூடாகவே இதைத் திருப்பிச் செலுத்தலாம். இதனால், ரணிலின் எஞ்சிய காலங்கள் பொருளாதாரக் கோட்பாடுகளில்தான் குறிவைக்கப்படவுள்ளன.

பழைய அரசியல் கலாசாரத்துக்கு இடமளிக்காமல், பாகுபாடுள்ள அதிகாரக் கோட்பாடுகளுக்கு உயிரூட்டாத வகையில்தான் இந்தக் குறிக்கோள்கள் இருக்கவும் இயங்கவும் செய்யும். இளைஞர்களின் எதிர்காலத்தை மேலெழுப்பும் முயற்சிகளுக்கு இந்நிதிகள் முதன்மையளிக்குமென பாராளுமன்றத்தில் ஜனாதிபதி கூறியதையும் இதைத்தான். உலகத்தை உள்ளங்கையில் பார்ப்பது போன்ற நவீன வளர்ச்சியில், பிராந்திய அதிகாரத்துக்குள் இளைஞர்களின் தேவையை மட்டுப்படுத்துவதா? சிங்கப்பூரிலிருந்தும் சிகாகோவிலிருந்தும் இன்னும் உலகின் எங்கிருந்தும் இலங்கையர்கள் இயங்கவும் சிந்திக்கவும் வேண்டும்.




நிலத்துக்கான அல்லது மொழிக்கான மோதல்கள் மானிட இயக்கத்தை மட்டுப்படுத்தி, பொருளாதார வளர்ச்சியைப் பின்னகர்த்தும். நாட்டின் முப்பது வருட யுத்தம் இதையே செய்துள்ளது.

இதனால்தான், இந்தக் கருத்துக்களை விதைக்கும் தேர்தல்களை இப்போது ஒத்திவைத்துள்ளார் இவர். உள்ளூராட்சியோ, மாகாண சபையோ இந்தக் குறுகிய கோணங்களைத்தான் தூண்டிவிடுகிறது. ஜனநாயகத்தின் அடையாளத்துக்கு பாராளுமன்றத் தேர்தலும், ஜனாதிபதித் தேர்தலும் இப்போதைக்குப் போதுமானது. இதனால், பொருளாதாரப் பயணத்துக்குப் புறப்படட்டும் இலங்கை. இதுதான், ஜனாதிபதியின் புதிய அரசியல் கலாசாரப் போக்காகப் போகிறதோ?

தொழில்நுட்ப அறிவு, வெளிநாட்டு மொழியறிவு இதுபோன்ற சர்வதேச சந்தைகளை இலக்கு வைக்கும் புலமைகளுக்கே முன்னுரிமை வழங்கப்படவுள்ளன. மூளைசாலிகள் இங்கிருந்து வெளியேறினாலும், வெளிநாடுகளிலிருந்து பல மூலதனங்கள் உள்நாட்டுக்கு வரவேண்டும். இதற்கான யுகம் இன்றைய இளைஞர்களின் உணர்வுகளில் இருக்கின்றன. இந்த உணர்வுகளை உணர்த்தும் அரசியலே இனி இலங்கைக்கு தேவை. இதைத்தான் ரோயல் கல்லூரியின் நிகழ்விலும் ஜனாதிபதி தெரிவித்திருந்தார்.

---

# நுவரெலியாவில் வெட்டப்படும் விலை உயர்ந்த சைப்ரஸ் மரங்கள்







(செ.திவாகரன்)

நுவரெலியாவில் தற்பொழுது மரங்கள் வெட்டுவதற்கு அனுமதி வழங்கியது யார்?

இலங்கையின் மத்திய பிரதேசத்தில் அமைந்துள்ள சுற்றுலா நகரமாகிய நுவரெலியா நகரில் உள்ள வரலாற்றில் முக்கிய இடம் பிடித்த 150 வருடங்ளுக்கு மேலாக பழமை வாய்ந்த நுவரெலியாவின் அழகிற்கு பெருமை தேடி கொடுக்கம் " சைப்ரஸ்" மரங்கள் விறகிற்காக வெட்டப் படுகின்றன. இதற்கு யார் அனுமதி வழங்கினார்கள் என்பது எவருக்கும் தெரியாமல் உள்ளது.

என நுவரெலியா மாநகரசபையின் முன்னாள் முதல்வரும் நுவரெலியா சுற்றாடல் பாதுகாப்பு குழு தலைவருமான மகிஹிந்த தொடபேகமகே கேள்வி எழுப்பியுள்ளார்.

அவர் இவ்விடயம் தொடர்பாக ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில், நுவரெலியாவில் கடந்த 150 வருடங்களுக்கு முன் நாட்டப்பட்ட மரங்கள் கடந்த பல நாட்களாக வெட்டப்படுகிறது. இதற்க்கு யார் அனுமதி வழங்கினார்கள் என்பது தெரியாமல் உள்ளது.

நுவரெலியாவிலுள்ள பாரிய "சைப்ரஸ் " மரங்களின் கிளைகள் வெட்டுவதாக கூறி மரங்களை மொட்டையாக வெட்டப்பட்டு வருகின்றன. இவ்வாறு மரங்கள் வெட்டப்படுவதால் நுவரெலியாவின் இயற்கை அழகிற்கு பாதிப்பு ஏற்பட்டு வருகின்றன. அத்தோடு மரங்கள் வெட்டப்படுவதால் சுற்றாடலுக்கு பாதிப்பு ஏற்படுவதோடு காலநிலையிலும் மாற்றங்கள் ஏற்படும் அபாயமும் காணப்படுகின்றன .

நுவரெலியா நகரிலுள்ள " சைப்ரஸ்" மரங்களை விறகுக்காக வெட்ட அனுமதித்த பலசாலி யார்? கிளைகளை வெட்டுகிறோம் என்ற போர்வையில் பல வாரங்களாக மரங்கள் அகற்றப்பட்ட்டுவருகின்றன. கடந்த காலங்களில் தர்மபால சுற்று வட்டாரத்திற்கு அருகிலுள்ள மரங்கள் வெட்டி அகற்றப்பட்டன அந்த இடத்தில் ஒரு தனியார் ஹோட்டல் உரிமையாளரின் வாகன தரிப்பிடமாக தற்பொழுது காட்சியளிக்கின்றது. நுவரெலியா நகரத்திற்கு செல்லும் பிரதான வீதியில் இரு பக்கங்ளிலுள்ள விலையுயர்ந்த சைப்ரஸ் மரங்களும் காரணமின்றி வெட்டப்படுகின்றன.

நுவரெலியா மாநகரசபையில் நகரை அழகு படுத்துவதற்கான ஒரு குழு அமைக்கப்பட்டுள்ளது. அந்த குழுவில் நுவரெலியா நகரிலுள்ள சகல அரச திணைக்களத்திலுள்ள உயர் அதிகாரிகள் அங்கம் வகிக்கின்றனர். அந்த குழுவிலும் அனுமதி பெறாமல் இவ்வாறு மரங்கள் வெட்டப்படுவது. நுவரெலியா நகரத்திற்கு பாதிப்பு ஏற்படுகின்றன. எனவே நகரிலுள்ள மரங்கள் வெட்டப்படுவதை நிறுத்த சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும். என ஹிந்த தொடம்பேகமகே மேலும் தெரிவித்தார்.

# நல்ல கவிதைகள், இணை வைப்பை எதிர்க்கும் வகையில் உள்ள கவிதைகள் அனுமதிக்கப்பட்டது

## நூல் வெளியீட்டு விழாவில் அஷ்ஷெய்க் எஸ்.எல்.நௌபர்





(எம்.எம்.எஸ்.ஸாகிர்)

நபித் தோழர் ஹஸ்ஸான் பின் ஸாபித் அவர்கள் மிகப் பெரிய கவிஞராக இருந்தார்கள். இவர் நபியவர்களின் கவிஞர் என்றே அறியப்பட்டுள்ளார். கவிதை எழுதுவது முற்றிலும் தவறானது என்றிருக்குமானால் நபியின் கவிஞர் என்று இவர் அழைக்கப்பட வேண்டிய தேவை என்ன இருக்கிறது? என அஷ்ஷெய்க் எஸ்.எல்.நௌபர் கபூரி றியாதி தெரிவித்தார்.

மேலும், இணை வைப்பாளர்களை தாக்கி வசைக்கவி பாடும் படியும் அப்படிப் பாடும் போது ஜிப்ரீல் (அலை) என்ற வானவர் ஹஸ்ஸான் அவர்களுக்கு உதவியாக இருப்பார் என்றும் நபி (ஸல்) அவர்கள் கூறுகிறார்கள்.

நல்ல கவிதைகள், இணை வைப்பை எதிர்க்கும் வகையில் உள்ள கவிதைகள் அனுமதிக்கப் பட்டதுதான் என்பது இதிலிருந்து தெளிவாக விளங்குகிறது என அவர் மேலும் தெரிவித்தார்.

தல்கஸ்பிடியைச் சேர்ந்த ஆசிரியை கவிதாயினி நதீரா வதூக் எழுதிய "விடிந்தும் திறந்து கிடக்கின்றது புத்தகம்" எனும் கவிதை நூலின் வெளியீட்டு விழா அண்மையில் தல்கஸ்பிடிய முஸ்லிம் மகா வித்தியாலயத்தின் கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

வித்தியாலயத்தின் அதிபர் சீ.எம்.எஸ். மஹ்பூப் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில், முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் பணிப்பாளர் பைஸல் ஆப்தீன் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டதோடு, மற்றும் விசேட அதிதியாக அஷ்ஷெய்க் எஸ். எல்.நௌபர் கபூரி றியாதி கலந்து கொண்டார்.

இந்நிகழ்வில் உரையாற்றிய அவர், தொடர்ந்தும் உரையாற்றுகையில், பராஉ (ரலி) அவர்கள் கூறியதாவது: நபி (ஸல்) அவர்கள், (பனூ குறைழா நாளில் கவிஞர்) ஹஸ்ஸான் பின் ஸாபித் (ரலி) அவர்களிடம், இணைவைப்பவர்களைத் தாக்கி வசைக்கவி பாடுங்கள். ஜிப்ரீல் உங்களுடன் (உறுதுணையாக) இருப்பார் என்று கூறினார்கள்.

(நூல்: புகாரி - 4123, 4124)

ஷரீத் பின் சுவைத் அஸ்ஸகஃபீ (ரலி) அவர்கள் கூறினார்கள் :

ஒரு நாள் நான் அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களுக்குப் பின்னால் (அவர்களது வாகனத்தில்) அமர்ந்திருந்தேன். அப்போது அவர்கள், "உமய்யா பின் அபிஸ் ஸ ல்த்தின் கவிதைகளில் ஏதேனும் உமக்குத் தெரியுமா?" என்று கேட்டார்கள்.

நான் "ஆம் (தெரியும்)" என்றேன். "பாடு" என்றார்கள். உடனே நான் ஒரு பாடலைப் பாடினேன். "இன்னும் பாடு" என்றார்கள். பிறகு இன்னொரு பாடலைப் பாடினேன். "இன்னும் பாடு" என்றார்கள். இவ்வாறே அல்லாஹ்வின் தூதருக்காக நூறு பாடல்களைப் பாடிக் காட்டினேன்.

நூல்: முஸ்லிம் - 4540

உமய்யா பின் அபிஸ் ஸ ல்த்தின் கவிதைகள் இஸ்லாமியக் கருத்துக்கு உட்பட்டவையாக இருந்த காரணத்தினால் தான் நபியவர்கள் அவற்றைப் பாடச் சொன்னார்கள். அவருடைய கவிதைகளில் 100 கவிதைகளை ஒரே நேரத்தில் ஷரீத் பின் சுவைத் அஸ்ஸகஃபீ (ரலி) அவர்கள் பாடிக்காட்டியிருக்கிறார்கள்.

நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் :

(கவிஞர்) லபீத் அவர்கள் சொன்ன "அறிக! அல்லாஹ்வைத் தவிர உள்ள பொருள்கள் அனைத்துமே அழியக் கூடியவையே" என்னும் சொல் தான், கவிஞர் சொன்ன சொற்களிலேயே மிக உண்மையான சொல்லாகும். (கவிஞர்) உமய்யா பின் அபிஸ் ஸ ல்த் (தன் கவிதையின் கருத்துகளால்) இஸ்லாத்தை ஏற்கும் அளவிற்கு வந்து விட்டார்.

இதை அபூ/ஹுரைரா (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள். (புகாரி - 3841)

சிறந்த கருத்துக்களை உடைய கவிதைகளை இஸ்லாம் தடுக்கவில்லை. இணை வைப்பிற்கு எதிரான ஏகத்துவக் கருத்துக்களைத் தாங்கிய கவிதைகளை இஸ்லாம் வரவேற்கிறது என்பதற்கு மேற்கண்ட ஹதீஸ்கள் சான்றாக உள்ளன.

"உம் இரட்சகனின் பாதைக்கு மக்களை நுண்ணறிவைக் கொண்டும் அழகிய நல்லுரையைக் கொண்டும் அழைப்பீராக!" ழக(அல்குர்ஆன்-16:125) எனும் இறைவசனத்தில் இடம்பெற்றுள்ள 'ஹிக்மா' (நுண்ணறிவு) என்ற சொல்லையும், "இன்ன மினஷ் ஷிஅரி ஹிக்மா" (திண்ணமாக, கவிதைகளில் நுண்ணறிவு பொதிந்துள்ளது. - இப்னு மாஜா) என்ற நபிமொழியையும் பொருத்திப் பாருங்கள்.

"உண்மையும் அழகுணர்வும் நிறைந்த சொற்களால் வாழ்க்கையைச் சொல்லோவியமாகத் தீட்டிக் காட்டுவதே கவிதை" என்று கூறுகின்றார் இலக்கிய மேதை ஒருவர். (இலக்கியக் கலை - பக்கம் 46) "ஊடுருவி நிற்கும் உண்மைப் பொருளை உணர்த்த வல்லது கவிதை" என்பர் ஆய்வாளர்கள்.

ஓரிறைக் கொள்கையை அடிப்படையாகக் கொண்ட இஸ்லாம் எனும் வாழ்க்கை நெறியில் கவிதைக்கென்று ஒரு கட்டுப்பாடான இலக்கணமே வகுக்கப்பட்டுள்ளது. ஏனெனில், 'கவிதைகளெல்லாம் பொய்' என்ற பொதுவான கருத்தை மக்கள் கொண்டிருப்பதாலும், கற்பனைகளையே மூலதனமாகக் கொண்டு முற்காலக் கவிஞர்கள் கவி பாடியதாலும், இஸ்லாமியத் திருமறை குர்ஆன், "கவிஞர்களை வழிகேடர்கள்தாம் பின்பற்றுவர்" (26:224) என்று கூறுகின்றது.

என்றாலும், இறைவன் அல்லாஹ் இறக்கிய வேதமும், இறைத்தூதர் (ஸல்) அவர்கள் பேசிய மொழியும் அரபியாக இருப்பதால், குர்ஆனிய வசனங்களும் நபிமொழிகளும் சில இடங்களில் கவிதையின் இலக்கியத் தரத்தில் அமைந்திருக்கக் காண்கின்றோம். அரபி இலக்கியத்தில், இஸ்லாத்திற்கு முந்திய 'ஜாஹிலிய்யா' எனும் அறியாமைக் காலத்திலிருந்தும், கவிதைகள் மலிந்து கிடக்கின்றன. இம்ரஉல் கைஸ்,

உமைய்யத் இப்னு அபிஸ்ஸ ல்த், லபீத் போன்ற புகழ் வாய்ந்த கவிஞர்கள் அன்று இருந்துள்ளனர். ஆனால், அத்தகைய கவி வல்லாரையும் மலைக்க வைக்கும் விதமாக, "மா ஹாதா கலாமுல் பஷர்" என்று கூற வைத்தது அல்குர்ஆன்!

மக்காவில் தொடக்கமாக இறங்கிய இறைவசனங்கள் மக்கத்து இலக்கிய விற்பன்னர்களுக்கும் அறிவில் முதிர்ந்த குறைஷியருக்கும் வாயாப்புக் கொடுக்கும் விதத்தில், இனிய ஓசையுடன் கவிதைகளைப் போன்று அமைந்திருப்பதை நாம் காண முடிகின்றது. இதற்குச் சான்றாக, அன்றாடத் தொழுகைகளில் நாம் ஓதும் சிறு சிறு அத்தியாயங்கள் ஓசை நயத்துடன் உள்ளதை நாம் உணரலாம்

இஸ்லாத்தின் இறுதித் தூ தர் முஹம்மத் (ஸல்) அவர்கள் நல்ல கவிஞர்களை ஊக்கப் படுத்தியுள்ளார்கள்! சிறந்த கவிதைகளைச் செவி மடுத்துப் பாராட்டியும் உள்ளார்கள்! கவிஞர்களைக் கவி பாடத் தூ ண்டியும் உள்ளார்கள்! ஏன், அவர்களே சில வேளைகளில் கவி பாடியும் உள்ளார்கள்! நபிமொழி இலக்கியங்களையும் நபி வரலாற்றையும் நன்கு ஆராய்பவர்கள் இதற்கு ஏராளமான சான்றுகளை அவற்றில் காண முடியும்.

மாநபியவர்கள் மக்கத்துக் குறைஷிகளின் கொடுமைகளைத் தாங்க முடியாமல் மதீனாவுக்குப் புலம் பெயர்ந்து சென்றபோது, மதீனாவில் அவர்களை எதிர்கொண்டு அன்பாதரவுடன் சிறுவர் சிறுமியர் கூடிப் பாடிய இசைப் பாடல் நாம் அனைவரும் அறிந்த ஒன்றல்லவா? அது இதோ:

"தலஅல் பத்று அலைனா, மின் தனிய்யாத்தில் வதா,

வஜபஷ்க்று அலைனா, மா தஆ லில்லாஹி தா,

அய்யுஹல் மபுஊது ஃபீனா, ஜிஃர்த்த மன் இலைஹி தா,"

- சான்றுகள்: பைஹகீ, அபூதாவூத்

இந்த வாழ்த்துக் கவிதை வரிகளைக் கீழ்க் கண்டவாறு தமிழ்க் கவிதை வடிவில் ஆக்கலாம்:

"எங்கள் மீதே ஒளிவீச எழுந்து வந்த வெண்ணிலவு

மங்கா தனியத் துல்வதாவின் மருங்கி ருந்து வந்ததுவே.

அல்லாவின்பால் அழைப்பாளர் அழைக்கும் போது நாங்களெலாம்

வல்லா னுக்கே நன்றியினை வழங்கக் கடமைப் பட்டுள்ளோம்.

இறைவனனுப்பிய தூதரிலே இறுதித் தூதாய் வந்தவரே!

குறையில் லாவும் நேர்வழியில் கூடி யுமக்குக் கீழ்ப்படிவோம்."

இறை உவப்பையும் நபி நேசத்தையும் இதயத்தில் கொண்டிருக்கும் ஒவ்வொருவரும் இது போன்ற கவிதை வரிகளில் இன்பத்தைக் காண்பார்கள் என்பதில் ஐயமுண்டோ? என்றும் தெரிவித்தார்.

# மாவனல்லையில் நடைபெற்ற Xecutive Chef Season 2







மாவனல்லை சாஹிரா கல்லூ ரியின் ஒணுயாசையைளெ அமைப்பின் பெண்கள் பிரிவு ஏற்பாடு செய்த கல்லூரியின் பழைய மாணவிகளுக்கான ஒநஉரவளைந ஊாநக ளுநயளழெ 2 போட்டி நிகழ்ச்சி 2023 மார்ச் மாதம் 12ம் திகதி மாவனல்லை ராலியா வரவேற்பு மண்டபத்தில் வெகு விமர்சையாக நடைபெற்று முடிந்தது.

இப்போட்டி நிகழ்ச்சியானது சிரேஷ்ட பிரிவு மற்றும் கனிஷ்ட பிரிவு என இரு பிரிவுகளாக நடைபெற்றதோடு பழைய மாணவிகள் தங்கள் பாடசாலை குழுக்களை பிரதிநிதித்துவப் படுத்தும் வகையில் குழு நிகழ்ச்சியாக நடைபெற்றமை சிறப்பம்சமாகும்.

அத்துடன் இந்த நிகழ்வு நடைபெறும் வளாகத்தில் சிறு உற்பத்தியாளர்களுக்கான சந்தை வாய்ப்பை ஏற்படுத்திக்கொடுக்கும் நோக்குடன் ஆமைெ டூழரவஙைரந டீயணயயச ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இந்த நிகழ்வில் பிரதான அதிதியாக சாஹிராக் கல்லூரியின் பழைய மாணவியும் பேராதனை பல்கலைக்கழகத்தின் புவியியல் பேராசிரியருமான னுச. குயளநநாய யுணஅை கலந்து சிறப்பித்தார்.

போட்டி நிறைவடைந்த பின்னர் மாலை 4 மணியளவில் பரிசளிப்பு விழா நடைபெற்றது.



புத்தளம் பிரதேசத்தில் வறிய குடுங்களுக்கான குழாய் கிணறுகள் சமூக ஆர்வலரும், அகில இலங்கை வை.எம்.எம்.ஏ பேரவையின் புத்தளம் மாவட்ட பணிப்பாளருமான முஜாஹித் நிசாரின் ஏற்பட்டில் புத்தளத்தில் வசிக்கின்ற சுமார் 08 குடும்பங்களுக்கு முஜாஹித் நிசாரின் நேரடி கண்காணிப்பின் பெயரில் YWMA - Sri Lanka அமைப்பின் உதவியோடு கடந்த திங்களன்று (20) வழங்கி வைக்கப்பட்டது.

# அடுத்த தேர்தலுக்கு பிறகு உருவாகும் எந்தவொரு அரசிலும் நாம் பலமான பங்காளியாக இருப்போம்..!

## ஈ.ஜ.ம.மு – த.மு.கூ. தலைவர் மனோ கணேசன் எம்பி,

அடுத்த தேர்தலில் உண்மையான ஆட்சி மாற்றம் நடைபெறும். எதிர்கட்சி தலைவர் சஜித் பிரேமதாசவுடன் நாம் இன்று ஐக்கிய மக்கள் கூட்டணியில் இருக்கிறோம். அவர் தலைமையில் புதிய ஆட்சி மலரும் என நாம் எதிர்பார்க்கிறோம். எது எப்படி இருந்தாலும், அடுத்த தேர்தலுக்கு பிறகு உருவாகும் எந்தவொரு அரசிலும் நாம் பலமான பங்காளியாக இருப்போம் என ஜனநாயக மக்கள் முன்னணி-தமிழ் முற்போக்கு கூட்டணி தலைவர் மனோ கணேசன் கூறியுள்ளார்.

ஜனநாயக மக்கள் முன்னணியின் கொழும்பு மாவட்ட செயற்குழு கூட்டம் கொழும்பு தெற்கு பணிமனையில் நடைபெற்றது. கட்சியின் கொழும்பு மாவட்ட அமைப்பாளர் பால சுரேஷ் குமார் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்நிகழ்வில் பொது செயலாளர் கே. டி. குருசாமி, தேசிய அமைப்பாளர் பிரகாஷ் கணேசன், பிரசார செயலாளர் பரணிதரன் முருகேசு, நிர்வாக செயலாளர் பிரியாணி குணரத்ன ஆகியோர் கலந்துக்கொண்டனர். மாவட்டம் தழுவிய வட்டார செயலாளர்களுக்கு நியமனங்களை வழங்கி உரையாற்றிய கட்சி தலைவர் மனோ கணேசன் எம்பி மேலும் கூறியதாவது,

நமக்கு இந்நாட்டில் ஜனாதிபதி ஆக முடியாது. பிரதமர் ஆக முடியாது. சட்டத்தில் தடை இல்லை. ஆனால், நடைமுறையில் அந்த உரிமை எமக்கு மறுக்கப்பட்டுள்ளது. ஆகவே அரசாங்கங்கங்களில் பலமான பங்காளியாக இருக்கும் உரிமையை நாம் பயன்படுத்துவோம். அதன் மூலமே நாம் பிரதிநிதித்துவம் செய்யும் மக்களுக்கு நாம் பணியாற்ற முடியும்.

இதுவே ஜனநாயக மக்கள் முன்னணியின் நிலைப்பாடு. எமது தமிழ் முற்போக்கு கூட்டணியின் நிலைப்பாடு. நாம் இடம்பெறும் எமது அரசாங்கம் எதுவென நாம் உரிய வேளையில் தீர்மானிப்போம்.

இன்றைய அரசில் இணைந்து உடனடியாக பதவி பிரமாணங்களை செய்து பதவி ஏற்க எமக்கு முடியும். அதற்கான திறந்த அழைப்பு, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடமிருந்து, எமக்கு எப்போதும் இருக்கிறது. ஜனாதிபதி விக்கிரமசிங்கவை அணுக எனக்கு தரகர் தேவையில்லை. ஒரு தொலைபேசி அழைப்பு போதும். ஆனால், இன்று அரசில் நுழைந்து அமைச்சராக ஊர்வலம் வருவதில் எமக்கு நாட்டம் இல்லை. அதற்கான காரணங்கள் இன்று இல்லை. மக்களுக்கு பணி செய்யும் சாத்தியங்கள் இந்த அரசில் இன்று இல்லை.

கடந்த 2015-2019 நல்லாட்சி அரசில் நாம் பலத்த சவால்களுக்கு மத்தியில் பல அபிவிருத்தி திட்டங்களை முன்னெடுத்தோம். அதற்கு முன் 40 ஆண்டுகளில் மலையகத்தில் நடைபெறாத அபிவிருத்தி திட்டங்களை முன்னெடுத்தோம். சொந்த காணி, தனி வீட்டு திட்டத்தை அமைச்சரவை அங்கீகார சட்ட வலுவுடன் ஆரம்பித்து வைத்தோம். மலையகத்துக்கு இந்திய பிரதமர் மோடியை அழைத்து வந்து அவர் வாயில் இருந்து மேலும் 10,000 வீடுகளுக்கான உறுதிமொழியை பெற்றோம். அன்று நாம் ஆரம்பித்த திட்டங்களை, இன்று அங்கே முன்னேடுத்தாலே போதும். புதிதாக வேறு ஒன்றும் செய்ய தேவையில்லை.



கொழும்பில் 2010-2015 ஆண்டுகால ராஜபக்ச ஆட்சியின் போது, கொழும்பு மாநகரில் பின்தங்கிய குடிசை வாழ் தமிழ் பேசும் மக்களை ராணுவத்தை கொண்டு, அப்புறப்படுத்தி தூர இடங்களில் கொண்டு சென்று குடியேற்ற, அன்றைய அரசின் பாதுகாப்பு செயலாளர் கோதாபய ராஜபக்ச திட்டமிட்டதையும், அவற்றை எதிர்த்து களத்தில் நின்று நாம் போராடியதையும் நீங்கள் மறக்க மாட்டீர்கள்.

2015-2019 நல்லாட்சி அரசில், வட கொழும்பில் நமது அரசு, 13,150 தொடர்மாடி மனைகளை கட்டியது. இன்று வடகொழும்பில் பின்தங்கிய குடிசை குடியிருப்புகள் இல்லை. பின்தங்கிய குடிசை வாழ் மக்களை நாம் தொடர்மாடி மனைகளில் குடியமர்த்தினோம். ஒருவரையும் கொழும்புக்கு வெளியே அப்புறப்படுத்த கூடாது என்பதே என் ஒரே நிபந்தனையாக இருந்தது. அன்றைய துறைசார் அமைச்சர் நண்பர் சம்பிக்க ரணவக்க மிக நியாயமாக நடந்துக்கொண்டார்.

# கல்வி கற்ற நீங்கள் உங்கள் பெற்றோர்களையும் கற்பித்த ஆசிரியர்களையும் என்றும் மறக்கவேண்டாம்







கல்வி கற்ற நீங்கள் உங்கள் பெற்றோர்களையும் கற்பித்த ஆசிரியர்களையும் என்றும் மறக்கவேண்டாம். கல்வி இருந்தால் உலகில் எங்கு சென்றாலும் உரிய இடம் கிடைக்கும் என விஷேட வைத்திய நிபுனர் வித்தியாநிதி ரிஸ்னி சக்காப் நீர்கொழும்பு, கல்வி கலாசார சகாய நிறுவனத்தின் (Education Culture Helper Organaization) மூன்று ஆண்டு நிறைவு விழாவும் பல்கலைக்கழகங்களுக்கு தெரிவு செய்யப்பட்ட மாணவர்களுக்கு புலமைபரிசில் வழங்கும் நிகழ்வும் 19 ம் திகதி ஞாயிற்றுக்கிழமை நீர்கொழும்பு அல் ஹிலால் தேசிய கல்லூரி கேட்போர் கூடத்தில் நடைபெற்ற போது பிரதம அதிதியாக கலந்துகொண்டு உரையாற்றும் போது தெரிவித்தார்.

அமைப்பின் தலைவர் ஓய்வுநிலை அதிபர் எம்.எம்.எம். றிழுவான் தலைமையில் நடைபெற்ற இவ் வைபவத்தில் அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

பெற்றார்கள் பிள்ளைகளை பாடசாலைக்கு அனுப்புவதில் பட்ட கஷ்டங்களை எண்ணிப் பார்க்க வேண்டும். அதேபோல் நீங்கள் இந்த நிலைக்கு வருவதற்கு காரணமாக இருந்த ஆசிரியர்களையும் மறக்க வேண்டாம். அவர்களை காணும்போது மட்டுமன்றி எந்த நேரமும் நினைவில் வைத்திருங்கள்.

பெற்றார்களும், ஆசிரியர்களும் எமக்காக கஷ்டப்பட்டவர்கள். கல்வியை கற்பதுதான் உங்கள் முக்கிய குறிக்கோளாக இருக்க வேண்டும். உங்களுக்கு தகுதி இருந்தால் உலகில் எங்கு சென்றாலும் உரிய இடம் கிடைக்கும். அதனை நான் உயர் கல்விக்காக வெளிநாடு சென்றபோது அனுபவித்துள்ளேன். உரிய தகுதி இருந்தால் எவரினதும் சிபாரிசு தேவையில்லை.

பல்கலைக்கழகங்களில் விரிவுரைகளுக்குச் செல்லும் போது முன்னாயத்துடன் செல்லுங்கள். அப்போதுதான் விரிவுரையாளர்கள் கூறுவதை புரிந்துகொள்ள முடியும். வாசிகசாலைகளை முழுமையாக பயன்படுத்திக்கொள்ளுங்கள். கல்விக்கு புறம்பாக விளையாட்டுக்கள் போன்ற மேலதிக நடவடிக்கைகளிலும் ஈடுபடுங்கள் எனக்கு கூறினார்.

நீர்கொழும்பு பெரிய பள்ளிவாசல் பேஷ் இமாம் அஷ் ஷேக் எம்.ஏ. சிறாஜ் அவர்களின் கிறாத் ஓதலுடன் ஆரம்பிக்கப்பட்டது. பிரதம அதியாக விஷேட வைத்திய நிபுனர் வித்தியாநிதி ரிஸ்னி ஸக்காப் கலந்து சிறப்பித்ததுடன் கௌரவ அதிதியாக அல் ஹிலால் தேசிய பாடசாலை அதிபர் வித்தியா விஜயசிரி எம்.எஸ்.எம். சஹிர் கலந்துகொன்றார்.

இவ்வைபவத்தின் போது இம்முறை நாட்டின் பல்வேறு பல்கலைக் கழகங்களுக்கு தெரிவுசெய்யப்பட்ட பெரியமுல்லை பிரதேசத்தைச் சேர்ந்த அல் ஹிலால் தேசிய பாடசாலை,வித்தியாலங்கார மத்திய மகா வித்தியாலயம், நிவுஸ்டட் மகளிர் தேசிய பாடசாலை ஆகியவற்றின் 9 மாணவர்களுக்கு பிரதம அதிதி விசேட வைத்திய நிபுனர் ரிஸ்னி சக்காப் அவர்களினால் மாதந்தம் வழங்கு புலமைபரிசில் நிதிஉதவி வழங்கப்பட்டன.

இவ் வைபவத்தின் போது பதவி உயர் பெற்றவர்களான கிழக்கு மாகாண சிரேஷ்ட உதவி கணக்காய்வாளர்நாயகம் எம்.பி.ஐ.எம். றஸ்மி, பேராசிரியர் எம்.எச்.எப். சக்கீனா ஆகியோர்கள் நிணைவுச் சின்னம் வழங்கி பாராட்டப்பட்டனர்.

உதவி செயலாளர் எஸ்.எம். சிறாஜ் வரவேற்புரை நிகழ்தி நிகழ்ச்சிகளை நெறிப்படுத்தினார்.

தலைவர் எம். எம்.எம். றிலுவான் தனது தலைமை உரையில்,

கல்வியை கற்பவனாக இரு கல்வியை கற்பிப்பவனாக இரு கல்விற்கு உதவிசெய்பவனாக இரு நான்காமவனாக இருக்காதே என்ற நபிமொழியை சுட்டிக்காட்டி ஆரம்பித்து எமது இந்த நிறுவனத்தில் கல்வியை கற்பவர்கள் கல்வியை கற்பிப்பவர்கள் அதற்கு உதவிசெய்பவர்கள் அனைவரும் அடங்கியுள்ளனர்.

அல் ஹிலாலின் நூற்றாண்டு விழாவில் உதித்த எண்ணக்கருவுக்கு இனங்க எமது கல்வி கலாசார சகாய நிறுவனத்தை உறுவாக்கியதாகவும் 2020 ஆண்டு முதல் வருடத்தில் 4 மாணவர்களுக்கும் 2,3 வருடங்களில் தலா 7 பேர்களுமாக மொத்தம் 27 மாணவர்களுக்கு நிதி உதவி செய்து வருகின்றோம். பல்கலைக்கழகங்களின் பல்வேறு துறைகளுக்கும் தெரிவுசெய்யப்பட்டுள்ள இவர்களுக்கு பாடநெறி முடியும் வரை இந்த நிதி உதவியை மாதாந்தம் வழங்கிவருவதாகக் கூறினார்.

"எக்கோ" (ECHO) நிறுவனத்தின் மூன்றாண்டு நினைவு மலரையும் பிரதம அதிதி வெளியிட்டு வைத்தார்.

நிறுவன தலைவர் எம்.எம்.எம். றிழுவான் பிரதம அதிதிக்கு நிணைவுச் சின்னத்தை வழங்க பிரதி தலைவர் எம். ஆர்.எம். றொஷான் கௌரவ அதிதிக்கு நிணைவுச் சின்னத்தை வழங்கினார். கௌரவ அதிதி அதிபர் எம்.எஸ்.எம். சஹிர்,நிறுவன செயலாளர் எம்.எச்.எம். பாசில் ஆகியோர்களும் உரையாற்றினர்.

# சவூதி அரேபியாவின் “VISION 2030”

(காலித் ரிஸ்வான்)

தற்போதைய சவூதி அரேபிய மன்னர் சல்மான் பின் அப்துல் அஸீஸ்/டைய புதல்வரும் சவூதி அரேபியாவின் முடிக்குரிய இளவசரும் தான் ஆடீளு என அழைக்கப்படும் முஹம்மத் பின் சல்மான் ஆவார். கடந்த வருடம் முதல் சவூதி அரேபியாவின் பிரதமராகவும் பணியாற்றி வருகிறார்.

2015 முதல் 2022 வரை அந்நாட்டு பாதுகாப்பு அமைச்சராகவும் பதவி வகித்தமை குறிப்பிடத்தக்கது.

1985 ஆகஸ்ட் 31 இல் பிறந்த இவர் சிறு வயதிலிருந்தே அரசியல் விவகாரங்கள் மற்றும் அதனோடு தொடர்புடைய செயற்பாடுகளில் பெரும் ஆர்வம் காட்டி வந்தார். தனது தந்தையின் நிழல் தொடர்ந்து நடந்த இவர் தனது அரசியல் ரீதியான பிம்பத்தினை வளர்த்துக் கொள்வதில் மிகுந்த கவனமெடுத்தார். பல தரப்பட்ட உயர் புள்ளிகளுடன் எவ்வாறு தொடர்பு கொள்வது என்பது பற்றியும் அவர்களூடாக அரசியல் ரீதியான வலுவான உறவுகளை பேணுவது என்பது பற்றிய உத்திகளிலும் கைதேர்ந்தவர். 2007 ஆம் ஆண்டு மன்னர் சவூத் பலகலைக்கழகத்திலே சட்டக்கற்கையிலே இளங்கலைமானிப் பட்டம் பெற்ற இவர் அரேபிய ராஜ்யத்துக்குள் பொருளாதார, அரசியல் மற்றும் சுற்றுலாத் துறைகளின் மேம்பாட்டை கருத்தில் கொண்டு பல தொலைநோக்கு திட்டங்களை செயற்படுத்தி வருகிறார்.

ஆடீளு தேசியவாத சிந்தனை கொண்டவர் என பலராலும் வர்ணிக்கப்படுகிறார். அரசியலில் நவீன அணுகுமுறைகள் மற்றும் பொருளாதார, சமூக பிரச்சினைகளில் தாராளவாத நிலைப்பாட்டைக் கொண்டுள்ளார். இவரது கருத்தியல்களும், நடைமுறைகளும் முழுமையாக நவீனத்துவம் சார்ந்ததாக இருக்கின்றன.

ஆடீளு தனது ஆட்சியை மேலும் வலுப்படுத்தும் நோக்கோடும், இராஜ்யத்துக்கு உள்ளும் சர்வதேச ரீதியாகவும் தனது ஆட்சி தொடர்பான ஒரு நல்லபிப்பிராயத்தை ஏற்படுத்தவும் மேற் சொன்னவாறு பல சீர்திருத்தங்கள், புதிய திட்டங்களை முன் வைத்திருக்கிறார்.

இந்த திட்டங்கள் Saudi Vision 2030 என்ற மகுடம் தாங்கி நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன.

## Vision 2030 என்றால் என்ன?

சவூதி விஷன் 2030 எனும் மூலோபாயத் திட்டம் 2030 ஆம் ஆண்டு ஆகும் போது தொழில்நுட்பம் மற்றும் சுற்றுலா உள்ளிட்ட பெற்றோலிய உட்பத்தி அல்லாத துறைகளில் முதலீடு செய்வதன் மூலம் நாட்டின் பொருளாதாரத்தை பல்வகைப்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

விஷன் 2030 திட்டமானது துடிப்பானதொரு சமூகம், வளமான பொருளாதாரம் மற்றும் லட்சியம் வாய்ந்ததொரு நாடு ஆகிய மூன்று முதன்மைக் கருப்பொருள்களை மையமாக கொண்டு கட்டமைக்கப்பட்டுள்ளது.

இளவரசர் முஹம்மத் பின் சல்மான் தலைமையிலான பொருளாதார மற்றும் மேம்பாட்டு விவகார கவுன்சிலால் இந்த வரலாற்று முக்கியத்துவம் வாயந்த விஷன் 2030 திட்டம் கட்டியெழுப்பப்பட்டுள்ளது. இது சவூதி அரேபியாவின் நீண்ட கால பொருளாதார வெற்றிக்கான பல பாரிய இலக்குகள் மற்றும் சீர்திருத்த உத்திகளை உள்ளடக்கியது. இதில் மானியங்கள் குறைப்பு, சவூதி அரம்கோவுக்கான தனியார் முதலீட்டை ஊக்குவித்தல் இத்தோடு குறிப்பாக நாட்டின் சுற்றுலா மற்றும் பாதுகாப்பு போன்ற துறைகளை பலப்படுத்துதல், மேம்படுத்தல் தொடர்பான திட்டங்கள் அடங்குகின்றன.

ஒரு துடிப்பான சமுதாயத்தை கட்டியெழுப்புவதற்காக, சவுதி அரேபியா அதன் மக்கள் மற்றும் இஸ்லாமிய மார்க்க விழுமியங்களை மேம்படுத்துவதில் கவனம் செலுத்துகிறது. இது, தொடர்ச்சியான சில முயற்சிகளின் மூலமும் திட்டமிடல்கள் மூலமுமே சாத்தியப்பட முடியம். வருடாந்தம் உம்ரா கிரியைக்காக வரும் யாத்திரிகர்களை 8 மில்லியனிலிருந்து 30 மில்லியன் வரை அதிகரித்தல் உலகின் மிகப்பெரிய இஸ்லாமிய அருங்காட்சியகத்தை நிறுவுதல் யுனெஸ்கோவில் பதிவு செய்யப்பட்ட சவுதியின் பாரம்பரிய தளங்களின் எண்ணிக்கையை இரட்டிப்பாக்குதல் ராஜ்யத்திற்குள் கலாச்சாரம் மற்றும் பொழுதுபோக்குக்கான வாய்ப்புகளில் வளர்ச்சியை ஊக்குவித்தல் ஆரோக்கியமான வாழ்க்கை முறைகளை ஊக்குவித்தல், இதனால் வாரத்திற்கு ஒருமுறை உடற்பயிற்சி செய்யும் குடிமக்களின் எண்ணிக்கை 13 முதல் 40 சதவீதம் வரை அதிகரிக்கும் மற்றும் உலகின் 100 முதல் தரவரிசை நகரங்களில் சவுதியின் முக்கிய மூன்று நகரங்களும் உள்ளடங்கும் வகையில் அந்நகரங்களை அபிவிருத்தி செய்து மேம்படுத்தல்.

இவைகள் அந்த முக்கிய திட்டங்களில் உள்ளடங்குகிறது. இத்தோடு சேர்த்து பெண்களுக்கான தொழில் மற்றும் கல்வி வாய்புகளை அதிகரித்தல், விளையாட்டு கலை போன்ற துறைகளில் ஈடுபடுத்தல் அவர்களுக்கான சம உரிமைகளை வழங்குதல் போன்ற பெண்கள் நலன் கருதிய திட்டங்களும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.






பொருளாதாரத்தில் ஒரு வளமான நிலமையை அடைவதற்காக, சவூதி அதன் பொருளாதாரத்தை பன்முகப்படுத்தி அதன் குடிமக்களுக்கு கனிசமான வேலை வாய்ப்புகளை உருவாக்குகிறது. இத்தோடு சேர்த்து முக்கியமாக கல்வி, தொழிற்துறை மற்றும் புதிய கண்டுபிடிப்புகளில் ஆர்வம் காட்டுதல் அரசுடைமைகளை தனியார் மயப்படுத்துவதன் மூலம் நாட்டின் பொருளாதாரத்தை பல்வகைப்படுத்தல் உற்பத்தி, புதுப்பிக்கத்தக்க சக்திகள் மற்றும் சுற்றுலா துறை போன்ற வளர்ச்சியடையாத தொழில்துறைகளை மீள்கட்டமைப்புசெய்தல் பாலர் பருவம் முதல் உயர்கல்வி வரை அந்நாட்டுக் கல்வி நிறுவனங்களின் பாடத்திட்டம் மற்றும் அதன் தரத்தை நவீனப்படுத்துதல் 2030க்குள் உலகின் முதல் 200 பல்கலைக்கழகங்களில் குறைந்தது சவுதி அரேபியாவின் ஐந்து பல்கலைக்கழகங்களைக் கொண்டிருக்கும் வகையில் மாற்றங்களை கொண்டுவருதல் நிதி உதவிகளை வழங்குவதன் மூலம் சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்களின் வளர்ச்சியில் கவனம் செலுத்துதல். 2030-க்குள் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்களின் பங்களிப்பை 20மூ லிருந்து 35மூ ஆக உயர்த்துதல் போன்ற திட்டங்களும் நடைமுறைப்படுத்தப்படுகின்றன.

ஒரு இலட்சிய நாடாக இருப்பதற்காக, சவூதி அரேபியா தனது அரசாட்சி உத்திகளில், பொறுப்புக்கூறல், வெளிப்படைத்தன்மை மற்றும் செயல்திறனுடனான இயங்கு தன்மை ஆகியவற்றில் கவனம் செலுத்துகிறது. ‘நிலையான வெற்றியை உறுதியான அடித்தளங்கள் மூலம் மட்டுமே அடைய முடியும்’ இந்த கூற்றை அடிப்படையாக கொண்டு, அனைத்து நிலை ஊழல்களுக்கும் முற்றுப்புள்ளி வைக்கிறது ஆன்லைன் சேவைகளை விரிவுபடுத்துதல் மற்றும் நிர்வாகத் தரத்தை மேம்படுத்துவதன் மூலம் அரசாங்கத்தின் வெளிப்படைத்தன்மையை அதிகரிக்கிறது 500,000 க்கும் மேற்பட்ட அரசாங்க ஊழியர்களுக்கு சிறந்த முறைகளில் பயிற்சி அளிப்பதற்காக மனித வள மேம்பாட்டுக்கான கிங் சல்மான் திட்டத்தை நிறுவுதல் மற்றும் அதிகரித்த வினைதிறன் மற்றும் விளைதிறனுடன் செயற்படுவதன் மூலம் இலாப நோக்கற்ற துறைகளை மேம்படுத்துகிறது.

எனவே மொத்தத்தில் இந்த ஏளைழை2030 திட்டம், சவூதி அரேபியாவின் பொருளாதார அபிலாஷைகளை அடைவதற்கும் குடிமக்களின் வாழ்க்கை தரத்தை மாற்றியமைப்பதற்கான முயற்சியில் முதல் படியாகும்.




# நோன்பாளிகளுக்கு சுகாதாரமான உணவுகளை வழங்காத உணவங்கள் மீது நடவடிக்கை எடுக்க தீர்மானம்

## சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரி அர்சத் காரியப்பர்!

(நூருல் ஹுதா உமர்)

புனித நோன்புகாலத்தில் அதிகமான மக்கள் தமது இப்தாருக்கு தேவையான உணவுகளையும், சிலர் தமது ஸஹர் நேரத்திற்கு தேவையான உணவுகளையும் கடைகளிலையே வாங்குகிறார்கள். இதனை முன் கொண்டு உண்பதற்கு தரமற்ற உணவுகளை பொதுமக்களின் பாவனைக்கு வழங்குபவர்கள் மீதும், பாவனைக்கு பொருத்தமற்ற, நீண்டநாட்கள் குளிர்சாதன பெட்டியில் வைத்த, பழைய எண்ணெயில் தயாரிக்கப்பட்ட உணவுகளை மக்களுக்கு விற்பனை செய்பவர்கள் மீது திடீர் சோதனைகளை மேற்கொண்டு பாவனைக்கு உகந்ததல்லாத பொருட்களை அழிக்கவுள்ளதுடன், அந்த உணவங்களுக்கு எதிராக சட்டநடவடிக்கை எடுக்க தயாராக இருப்பதாக சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் எம்.ஜே.கே.எம். அர்சத் காரியப்பர் தெரிவித்தார்.



ஊடகங்களுக்கு இன்று கருத்து வெளியிட்ட அவர் தொடர்ந்தும் கருத்து வெளியிடுகையில், சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரி காரியாலய பொதுச்சுகாதார பரிசோதகர்கள் மற்றும் சுகாதாரத்துறையினரிடம் பொதுமக்கள் முன்வைக்கும் முறைப்பாடுகளை அடுத்து துப்பரவில்லாத, முறையான சுகாதார வழிமுறைகளை பின்பற்றாத, பாவனைக்கு உகந்ததல்லாத உணவுகளை விற்போர் மீதும் அந்த உணவகங்கள் மீதும் தயவு தாட்சணையின்றி நடவடிக்கை எடுக்க தீர்மானித்துள்ளோம்.

சுகாதாரத்தையும் தாண்டி இறைவனுக்கு பயந்து நோன்பாளிகள் சாப்பிடும் உணவுகளை தரமானதாக வழங்கவேண்டியது ஒவ்வொரு உணவகங்களினதும் கடமையாகும். நீண்டநேரம் நோன்புநோற்று நோன்பை துறக்கும் நேரத்தில் தரமில்லாத உணவுகளை உட்கொள்வதன் மூலம் பல்வேறு தர்மசங்கடங்களை அந்த நோன்பாளிகள் சந்திக்க நேரிடும். அதிகமதிகம் நன்மைகளை சேகரிக்க வேண்டிய இந்த மாதத்தில் நியாயமான விலைகளில் சுத்தமாகவும், சுகாதாரமுறையிலும் தயாரித்த உணவுகளை மக்களுக்கு வழங்க உணவகங்கள் முன்வர வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

# மாணவச் செல்வங்களுடன் நாம் 2023







மாணவச் செல்வங்களுடன் நாம் 2023 எனும் தொனிப்பொருளில் 500 தேவையுடைய மாணவர்களுக்கான அப்பியாச பயிற்சி கொப்பிகள் வழங்கும் 3 ஆம் நாள் நிகழ்வு அண்மையில் (22) இடம் பெற்றது. இந்நிகழ்வில் சம்மாந்துறை மபாஸா வித்தியாலயம் , வீரமுனை ஆர்.கே.எம்.வித்தியாலயம், பெத்துவில் அல் அஷ்ரப் வித்தியாலயம் , ஆகிய பாடசாலைகளிலிருந்து தெரிவு செய்யப்பட்ட மாணவர்களுக்கு அப்பியாச கொப்பிகள் வழங்கி வைக்கப்பட்டது. இந்நிகழ்வின் போது பிரதம அதீதியாக OCD அமைப்பின் தலைவரும் விஞ்ஞான முதுமாணியும், சமூக சேவையாளருமான அஸ்மி யாசீன் மற்றும் பாடசாலையின் அதிபர்களான ஹையரு நிஷா ,சென்ந்தமிழ் செல்வி, ரிஸ்வான் மௌலவி, சம்மாந்துறை மத்திய கல்லூரி பௌதீகவியல் ஆசிரியர் காதர், அம்பாறை மாவட்ட விளையாட்டு உத்தியோகத்தர் நிஸ்லீன் மற்றும் அமைப்பின் நிர்வாக செயலாளர்கள் மற்றும் அங்கத்தினர்களும் கலந்து சிறப்பித்தனர்.

# ஹஜ்ஜுல் அக்பர் விடுதலை!

2019 ஏப்ரல் 21 ஆம் திகதி உயிர்த்த ஞாயிறு தினத்தன்று இடம்பெற்ற அரசியல் சதி குண்டுவெடிப்பு செயற்பாட்டின் பிரதான மூலைக்காரரென பொலிஸுக்கு பொறுப்பான அமைச்சர் நாட்டுப் பற்றாளர் சரத் வீரசேகர குறிப்பிட்ட ஜாமாத்தே இஸ்லாமியின் தலைவர் ரஷ ீத் ஹஜ்ஜ/ல் அக்பர் கொழும்பு மெஜிஸ்ட்ரேட் நீதவானால் விடுவிக்கப்பட்டார்.இது தொடர்பில் தெற்கு சிங்கள ஊடகங்கள் அக்கரை செலுத்தவில்லை.

ஹஜ்ஜுல் அக்பர் நம்பர் ஒன் பயங்கரவாதி என்று எண்ணி, உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் பிரதான மூலைக்காரரென சொல்லப்பட்டு பறைசாற்றப்பட்ட பிரதான ஊடகங்களில் போன்று சைபர் வெப் தளங்கள் மூலமாகவும் இந்த விடுதலை பற்றி எதுவும் தெரியாதது போன்று செயற்பட்டுள்ளார்கள்.

ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவின் சிபாரிசுப் படி பயங்கரவாத தடுப்புச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்ட அவருக்கு எதிராக வழக்கை முன்னெடுப்பதற்கு போதிய சாட்சிகள் எதுவும் இல்லை என்றும், அவருக்கு எதிராக எந்த நடவடிக்கையும் எடுக்கப்போவதில்லை என்றும் சட்டமா அதிபர் திணைக்களம் தெரிவித்த பின் மெஜிஸ்ட்ரேட் நீதிமன்றம் அவரை சகல குற்றச்சாட்டுக்களிலிருந்தும் விடுவித்தார்.

கடந்த பெப்ரவரி 8 ஆம் திகதி வழங்கப்பட்ட நீதிமன்ற தீர்மானப் படி, வெளியே வந்த ஹஜ்ஜ/ல் அக்பர் மற்றும் அவரது சட்டத்தரணிகள் குழுவில் இருந்த சட்டத்தரணி எம்.ஜே சுமையா தீர்ப்புப் பற்றி பேசினார்.

2021 மார்ச் 12ஆம் திகதி உயர் நீதிமன்றத்தில் இந்த வழக்கை தாக்கல் செய்தது இந்த சட்டத்தரணியாகும்.

இன்றைய நாள் ஜாமாத்தே இஸ்லாமியின் முன்னாள் தலைவர் ஹஜ்ஜ/ல் அக்பருடைய வழக்கு மெஜிஸ்ட்ரேட் நீதிமன்றத்தில் இடம்பெற்றது. அந்த வழக்கு பயங்கரவாத தடுப்புச் சட்டத்தின் கீழ் அவருக்கு எதிராக குற்றச்சாட்டுக்கள் தொடரப்பட்டிருந்தது.அதற்கு எதிராக நாங்கள் ஹஜ்ஜுல் அக்பருடைய அடிப்படை மனித உரிமை மீறல்கள் குறித்து மனித உரிமை வழக்கொன்றை உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருந்தோம்.அதன்படி உஸ்தாத் ஹஜ்ஜ/ல் அக்பருக்கு பிணை கிடைத்தது.கௌரவம் மெஜிஸ்ட்ரேட் நீதிமன்றம் இன்று அவரை எல்லா குற்றச்சாட்டுக்களிலிருந்தும் விடுவித்தது.

இந்த முழுமையான செயற்பாட்டுக்காக சட்டத்தரணி சுமையாவுடன்,எம்.எம் ஸ /ஹைர்,எம்.சி.எம் முனீர் , பாரிஸ் ஸாலிஹ் ,ஸல்மான் ரியால், ரிஸ்வான்,உவைஸ்,கணேஷ் திசாநாயக்க,கயனி ரத்நாயக்க மற்றும் மேதா திசாநாயக்க ஆகியோர் ஹஜ்ஜ/ல் அக்பர் சார்பில் ஆஜராகினர்.சகல குற்றச்சாட்டுக்களிலிருந்தும் விடுவிக்கப்பட்டதோடு , அவருக்கு இருந்த பிணை நிபந்தனையும் நீக்கப்பட்டது. வெளிநாட்டுக்குச் செல்வதற்கு இருந்த தடையும் நீக்கப்பட்டது. தடுத்து வைக்கப்பட்ட அவரது கைப்பேசியும் ஒப்படைக்கப்பட்டது.

இந்த நிரபராதி மனிதன் தொடர்பாக பொலிஸ் அமைச்சர் சரத் வீரசேகர என்ன கூறினார்.

ஊடக சந்திப்பொன்றில் அத தெரண ஊடகவியலாளர் விதர்சன் பிரணாந்து கேட்ட கேள்விக்கு சரத் வீரசேகர இவ்வாறு மிகவும் மென்மையாக பதில் அளித்தார்.

இந்தப் பதிலனது அவர் பயன்படுத்தும் அமைச்சரவை அரசாங்கத்தினால் வழங்கப்பட்ட போலியான சிறப்புச் சலுகையை பயன்படுத்தி செய்தார். அவர் எவ்வித தயக்கமும் இன்றி நேரடியாக பிரதான மூலைக்காரரை பெயர் குறிப்பிட்டார்.

அவர் பெயர் குறிப்பிடும் இருவரில் ஒருவர் ஹஜ்ஜுல் அக்பர் ஆவார்.

நான் தொடராக இங்கு உறுதிப்படுத்த முயற்சிப்பது அரச அதிகாரிகளும் மற்றும் உத்தியோகஸ்தர்களும் ,அரச அதிகாரத்தை முழுமையாக தவறாக பயன்படுத்தி சட்டவிரோதமாகவும் ,எல்லை மீறியும் ,மனிதத்துக்கு எதிராக குற்றம் இழைப்பதென்பதாகும்.

ஹஜ்ஜுல் அக்பரின் வாய்ப்பு இருப்பது அரச கட்டுக்கதைகளும் , அரச குற்றத்தின் பெரும் பங்கு தாங்கி நிற்கின்ற நான் தொடராக எழுப்புகின்ற இந்த கட்டுக்கதைகளாகும்.ராஜபக்சவை சூப்புகின்ற ஊடகவியலாளர்கள் இந்த குற்றத்தின் பங்குதாரர்களாகி அவர்கள் மறு உலகுக்கு தெரிவிப்பது

ஒழுக்க விதிகளையோ,ஆகக் குறைந்த

ஊடக ஒழுங்கு விதிகளையோ கவனத்தில் கொள்ளாமல் ஆகும்.

போலிக்காரணங்களால் கைது செய்யப்படும் மனிதர்களுக்கு குறிப்பிட்ட குற்றங்களை கட்டியெழுப்புவதற்கு குற்றமிகு அரசாங்கங்கள் தொடர்ந்து வெற்றி பெறாத முயற்சிகளை எடுப்பது உறுதி செய்யப்பட்டு பயங்கரவாத தடுப்புச் சட்டத்தினை பரிசீலனை செய்வதற்கு

ஒன்றுமில்லை.அதனை போலிக்குள்ளாக்கி சுற்றிச் செல்வதற்கு ஒன்றுமில்லை. எல்லா இனங்களுக்கிடையேயும் புகுந்து குற்றச் செயல்களின் தனி ஆதிக்கத்தினை உத்தியோகரீதியாக பயன்படுத்துவதற்கு மட்டும் பயங்கரவாத கட்டுக் கதைகளுக்கு முடிவு வைக்க வேண்டும். பயங்கரவாத விசாரணை நாடக பிரதிகள் எழுதுவதை முழுமையாக இல்லாமல் செய்வதற்கு சமூகம் என்ற வகையில் நாங்கள் ஒன்றினைய வேண்டும்.

அரச சேவையை பிரதிநிதித்துவப்படுத்துகின்ற தற்கால ஊடகப் பயன்பாட்டை கட்டியெழுப்புவதும்,சமூக வன்முறைகள் மிக பயங்கரமாக பத்திரிகையில் காணலாம்.ஊடக பெரிய வீடு எனக்கூறும் லேக் ஹவுஸ் நிறுவனத்தின் புகழ் பூத்த வரலாற்றில் சிலுமின பத்திரிகை கூட அரச வன் செயலுக்கு பங்குகாரர்களாகியது ராஜபக்ஷக்களை கட்டிக்காப்பதின் பிரதான தேவையிலாகும்.



சிலுமின ஊடகவியலாளர் அமில மாளவி சூரிய 2019 பெப்ரவரி 27ம் திகதி சஹ்ரான் குழுவின் தற்கொலை செய்யும் 15பெண்கள் என்ற தலைப்பில் எழுதப்பட்ட புலனாய்வு கட்டுரையில் போலி தகவல்களின் மூலமாக பிரபல பொலிஸ் பேச்சாளர் பிரதிப்பொலிஸ்மா அதிபர் சட்டத்தரணி அஜித் ரோஹனவாகும். இந்த தற்கொலைகார குண்டுதாரிகளின் 15 பேரின் தகவல்களை வெளிப்படுத்துவதற்கு மாவனெல்ல ஹிங்குள்ள பிரதேசத்தின் பயங்கரவாத தடுப்பு பிரிவில் கைது செய்யப்படு விசாரணைகளுக்குட்படுத்தப்பட்ட மொஹம்மட் இப்ராஹீம் சஹீதா என்ற யுவதியாகும்” மாளவி சூரிய இவ்வாறு எழுதுகிறார். கடந்த 19ம் திகதி சஹீதா கைது செய்யப்பட்டு கேள்விக்கு உட்படுத்தப்பட்டு அவளிடம் இருந்து அநேக பரபரப்பு தகவல்கள் வெளியாகின என்று பொலிஸ் ஊடக பேச்சாளர் பிரதி பொலிஸ்மா அதிபர் அஜித் ரோகன தெரிவித்தார். பிரபல பொலிஸ் ஊடக பேச்சாளர் அஜித் ரோகன எவ்வளவு தூரம் மென்மையாக வசனங்களை கூறினார் என்றால், சிலுமின போன்ற தேசிய பத்திரை ஒன்றின் பக்கத்தில் இவ்வளவு மென்மையான வசனங்களை பயன்படுத்துகிறார். ஹஜ்ஜ/ல் அக்பர் சிலுமினவின் மாளவி சூர்யாவின் முக்கியமான பரபரப்பு தகவல்களுக்கு உள்ளே இருக்கிறார். அதாவது சஹீதாவின் இரு சகோதரர்கள் இப்போதும் பொது விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்கள். இந்த சகோதரர்கள் இருவரில் சாஹித் அப்துல் ஹக் பட்டதாரியாக கம்பொல பிரதேசத்தில் பிரபல பாடசாலை ஒன்றில் கலந்துரையாடலின் பொது ஆசிரியராக இருந்து பயங்கரவாதத்தையும் தீவிரவாதத்தையும் பரப்பியவர் என்று கூறப்படுகிறது.

அவர் 2014ம் ஆண்டு சிரிய மற்றும் துருக்கிக்கு சென்று இரு மாத காலம் ஐ.எஸ்.ஐ.எஸ் பயிற்ச்சிகளை பெற்றவர் என்றும் அவர் கைது செய்யப்பட சந்தர்ப்பத்தில் வீடியோக்களில் உறுதி செய்யப்பற்றிருக்கிறது. அவருக்கு ஐ.எஸ்.ஐ.எஸ் பயிற்சிக்கு போவதற்கு அவருக்கு வழி அமைத்திருப்பது அவரது தந்தையின் மூத்த சகோதரர் ஹஜ்ஜுல் அக்பர் ஆவர். கடுமையான தீவிரவாதத்தை பரப்பிய ஒரு நபராக 61வயது ஹஜ்ஜ/ல் அக்பர் 2019 ஒக்டோபர் மாதம் கொழும்பு குற்றப்பிரிவினால் கைது செய்யப்பட்டுள்ளார். 2023ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 8ம் திகதி கொழும்பு மெஜிஸ்ட்ரேட் நீதிமன்றத்தினால் முழுமையாக விடுவிக்கப்பட்ட தனது சகோதரின் மகனான ஐ.எஸ்.ஐ.எஸ் பயிற்ச்சி பெற்ற நேரடியாக செயற்பட்ட பயங்கரவாதியும் கடுமையாக தீவிர வாதத்தை பரப்பிய ஒருவருமாகும். சிலுமின மற்றுமன்றி இஸ்லாமிய பீதிக்குள்ளாகி இருக்கும் திவயின,அருண போன்ற பத்திரிக்கைகளும், டீவி, வானொலி அலைவரிசைகளும் ,பிரபல வெப் தளங்களும் விஷம் கக்கும் வேற்றுமையை வளர்கின்ற வெறுப்பு மொழிகளில் போலித்தகவல்களை கருத்துக்களை ஹஜ்ஜ/ல் அக்பர் வழக்கு தீர்ப்பினால் தடுக்க முடியவில்லை. எனினும் இந்த ஊடகங்கள் இந்த தீர்ப்பு குறித்து அமைதி காக்கின்றார்கள். அமைதி காப்பது ஊடகங்களில் மற்றும ஏன் சமூக ஊடகங்களில் சிவில் சமூகத்தில் கொழும்பு மெஜிஸ்ட்ரேட் நீதவான் வசந்த முதலிகேயை விடுவிப்பதற்கான சந்தர்ப்பத்தின் போது தெற்கில் பொது இதயத்தை கண்டு கொண்டோமா? வசந்தவை பயங்கரவாதியாக காட்டிய அரசாங்கத்துக்கு நீதிமன்றத்தல் கிடைத்த பதில் என்று கூறப்பட்டது.

ஹஜ்ஜுல் அக்பர் விடுவிக்கப்பட்டது அதே நீதிமன்றத்தாலாகும்.தெற்கில் பொது ஒளிவுடன் உருவாகும் வேறொரு கருத்தாகும் ஹஜ்ஜுல் அக்பர் ஆம் விடுவிக்கப்பட்டார் ஏன் அவரை நம்ப முடியவில்லை. பெப்ரவரி 12ம் திகதி கொழும்பு இலங்கை மன்ற கல்லூரியில் பயங்கரவாத தடுப்பு சட்டத்துக்கு எதிராக பகிரங்க கலந்துரையாடல் ஒன்று இடம்பெற்றது. அதில் ,

வசந்த முதலிகேயும் அவரது சட்டத்தரணிகளான நுவான் நோபகே, அறுமி சாடிகள், சுவஸ்திகா அருளிங்கம், கலந்துகொண்டனர்.

நன்றி – அனித்தா

எழுதியவர் – வெடிவர்தன